


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -336




# யார் மதவாதிகள்?
# சிவசேனா தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்

# இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலும் மூடி மறைக்கப்படும் உண்மைகளும்

# தமிழர்களின் தொடர் சாத்வீக போராட்டங்களும் ஐ.நா மனித உரிமைப்பேரவையின் கூட்டத்தொடரும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# யார் மதவாதிகள்? - சிவசேனா தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்

**கேள்வி : இன்றைய காலகட்டத்திலே அரசியல் என்பது ஒரு மதம் சார்ந்த அல்லது இனம் சார்ந்த, மொழி சார்ந்த அரசியலாக தான் சென்று கொண்டு இருக்கிறது. மதம் சார்ந்த அரசியலைக் கடந்த பல கி.மு, கி.பி என்றடிப்படையில் பார்க்கும்பொழுது அந்த நூற்றாண்டுகளில் இருந்தே இந்த மதவாத அரசியல் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டு வந்த நிலையிலே இன்றைய மதவாத அரசியலை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில் :-** பூமிப் பந்திலே மதவாதம் இல்லாத அரசியலை சொல்லவில்லை. பேட்டன்ரசல் என்பவர் மாபெரும் அறிஞர். அவர் சொல்கின்றார் புத்த சமயத்தை தோற்றுவித்தவர் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தினார். இயேசு கிறிஸ்து தன்னுடைய அறிவைப்பயன்படுத்தி மக்களுடைய நாகரீகத்தை மேலெடுக்க முயற்சி செய்தார். ஆனால் அதற்கு பின்னிருந்த முகமதைய சமயமாக இருந்தாலும்மார்க்ஸ்தொடங்கியகமிஸ்டர் சமூகத்திலே ஊடுருவி சமூகத்தையே புரட்டிப்போடக்கூடிய மதங்களாக பேட்டன்ரசல் தெளிவாக சொல்கிறார் சமூகத்தை புரட்டிப்போடக்கூடிய கம்னீசியம் சித்தாந்தமல்ல அதுவொரு மதம் என்று தான் சொல்லுகின்றார்.

கம்னீசியத்தை அவர் சொல்லும் போது இஸ்லாமியத்தை போல் அதுவும் ஒரு வெறிபிடித்த மதம் கம்னீசியம் என்று சொல்கின்றார். இன்று உலகத்தில் கம்னீசியம் ஒரு மதம் என்றால் அது இன்று பிடிவாத கொள்கையை மற்றவர் மீது திணிக்கின்ற இஸ்லாம் ஒரு மதம் என்றால் பிடிவாத கொள்கையை மற்றவர் மீது திணிக்கின்ற கொலை செய்கின்றது என்று நபி எழுதியிருக்கின்றார். இயேசு கிறிஸ்து அவ்வாறு சொல்லவில்லை இயேசு கிறிஸ்து சொல்கின்றார் நான் சொல்லும் செய்தியை உலகத்திற்கு எடுத்துச்செல்லுங்கள் என்று சொல்கின்றார் அவர் போய் திணியுங்கள் என்று சொல்லவில்லை.

ஆனால் தற்பொழுது உள்ளவர்கள் அப்படி செய்கின்றார். புத்தர் தன்னைமதம் என்றே சொல்லவில்லை. அவர் இந்துவாகத்தான் இருந்தார் இந்துவாகத்தான் இறந்தார். இப்பொழுது வந்தவர்கள் அவருடைய அறக்கோட்பாடுகளையும் வினையகோட்பாடுகளையும் கொண்டு போர்த்துக்கேயர் வந்தபின் தான் புத்தபெருமானுக்கு மதம் என்னும் தகுதி வந்தது அதற்கு முன்னர் அது மதமாக கருதப்படவில்லை. இந்து சமயத்திலுள்ள பிரிவுகள் சமணர்கள் இருந்தார்கள் சீக்கியர்கள் இருந்தார்கள் அவ்வாறு பல பிரிவுகளாக இருந்ததே தவிர இன்றும் சீக்கியர்கள் ஒரு மதமாக கருதப்படவில்லை. ஆனால் இந்தியாவில் உள்ள புத்தர்களும் சரி சமணர்களும் சரி அவர்கள் இந்துக்களின் பகுதிகளாகத்தான் இருக்கிறார்களே தவிர தங்களை தனி மதமாக கருதவில்லை.

ஆனால் போர்த்துக்கேயர் வந்ததன் பின்னர் இலங்கையில் தனிமதமாக கருதினார்கள். வைஸ்ணவ சைவ தகராறுகள் நிறைய நடந்திருக்கிறது. அதற்காக இந்து இல்லையென்று சொல்ல முடியாது. எங்களுக்குள்ளேயே சாதிக்குள் பிரச்சனை வருகின்றது. ஆகவெ இது எங்களுக்குள் இருக்கின்ற குடும்ப பிரச்சனை. மதம் என்ற சொல்லை கொண்டு வந்ததே மேலைத்தேய நாட்டுக்காரர்தான். அதுபாலைவனத்திலே அவர்கள் உருவாக்கின 2 கொள்கை. ஒன்று இயேசு கிறிஸ்து மற்றையது முகமது நபி. 2 கொள்கைகளும் மதம் என்ற சொல்லை தெற்காசிய பிராந்தியத்தில் அல்லது வலது கண்டத்தில் கொண்டுவந்ததாக நாங்கள் மதவாத அரசியலை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது நாங்கள் அல்ல, புத்தர்கள் அல்ல. பழைய சண்டைகளை எடுத்துப் பார்த்தால் இலங்கையில் ஏதேனும் மதம் தொடர்பான சண்டைகள் நடந்திருக்கிறதா? புத்தர்கள் சைவர்களை அழிக்கின்றோம் என்று எங்காவது போய் இருக்கிறார்களா, அரசர்கள் போரிட்டிருக்கிறார்கள். அந்நியர்களின் ஆதிக்கத்தை எதிர்த்திருக்கிறார்கள்.

ஆனால் புத்த கோவில்களில் புத்தர் சிலைகளை வைத்தார்களே தவிர சைவ சமயத்தை விட்டு அவர்கள் அகழவே இல்லை. சிவலிங்கத்திற்கு இன்றும் புத்தர் பிக்கு அபிசேகம் செய்யும் காட்சியை காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ் பிக்கு அல்ல சிங்கள புத்தர் பிக்கு. கோவிலில் தமிழ் பெண்ணான கண்ணகிக்கு கோவில் இல்லாத புத்தர் யாரும் இருக்கிறார்களா? கண்ணகியை சாத்தான் என்று சொல்லி கோவிலை உடைத்து மரியான் கோவிலை காட்டினார்களே 1855 ஆம் ஆண்டுக்கு பின்னர் மடுவில். அதே கண்ணகியை புத்த மதத்தில் உள்ளவர்கள் எவ்வாறு வழிபடுகின்றார்கள்? போற்றுகின்றார்கள். பாராட்டுகின்றார்கள். திருவிழா எடுக்கிறார்கள். தெருத்தெருவாக ஊர்வலம் கொண்டு செல்கிறார்கள் அவர்கள் இந்துக்களா? புத்தர்களா?

**கேள்வி : இலங்கையில் நீங்கள் குறிப்பிடும் பொழுது இந்த மதவாத அரசியல் தற்பொழுது தொடர்ந்தும் நிலவுவதாகத் தான் அவதானிக்க முடிகிறது. காரணம் என்னவென்றால் இன்று மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருந்த காலத்திலே 1000 புத்தர் சிலைகளை வடகிழக்கிலும் பல இடங்களிலும் நிறுவுவதான ஒரு நிகழ்ச்சிநிரலை போட்டிருந்தார். புத்த மதத்தை வழிபடுவது அவரவரின் சுதந்திரம் அது ஏற்றுக்கொள்ளப்படும் விடயம். ஆனால் இந்த மதத்திணிப்புகள் அதாவது அரசமரம் இருக்கும் இடத்திலும் அல்லது மலைகள் குன்றுகள் இருக்கும் இடத்திலும் பௌத்த சிலைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாக ஏற்படுத்துவது ஒரு மதத்திணிப்பாக இருக்கிறது அல்லவா?**

**பதில் :-** அப்படி செய்ய நாங்கள் சைவர்களை விடமாட்டோம். மதம் என்ற போர்வையில் திணிப்புகளை ஏற்படுத்தினால் அதை தடுப்பதற்காக சிவசேனையை நாங்கள் உருவாக்குகின்றோம். மத மாற்றத்தை தடுக்க வேண்டும். கோவில்களிலே மதத்திணிப்பை தடுக்க வேண்டும். சைவர்களின் எதிர்காலத்தை சைவர்களே தீர்மானிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நாங்கள்



சிவசேனையை உருவாக்கினோம். அது புத்த சமயமாக இருக்கலாம். கிறிஸ்தவ சமயமாக இருக்கலாம். முகமது சமயமாக இருக்கலாம் மூன்று மதத்தினரும் சைவக்கோவிலைத் தானே இடித்திருக்கிறார்கள். சைவன் ஒரு மசூதியை இடித்திருக்கிறானா? சைவன் ஒரு கிறிஸ்தவ கோவிலை இடித்திருக்கிறானா? ஐசவன் ஒரு புத்த கோவிலை இடித்திருக்கிறானா? அவ்வாறு ஏதேனும் வரலாறுகள் இலங்கையில் இருக்கின்றனவா? யார் மதவாதிகள் சைவக்கோவிலை இடித்துவிட்டு நான் காளி கோவிலை இடித்தேன் அமைச்சர் பதவியை பயன்படுத்தினேன் என்று கூறுகிறார்கள் அவர்கள் மதவாதியா இல்லையா? நான் கண்ணகி கோவிலை இடித்தேன், மரியான் கோவிலை கட்டினேன், திருக்கேதீஸ்வரன் கோவிலை உடைத்தேன் என்று கூறுபவர்கள் மதவாதியா இல்லையா? நாங்கள் எங்காவது ஒரு கோவிலை உடைத்திருக்கிறோமா

**கேள்வி : மதவாத அரசியலை தடுப்பதற்கான வழிமுறைகளை நீங்கள் சிவசேனை என்ற ரீதியிலே கையாளவில்லையா?**

**பதில் :-** மக்கள் தான் தடுக்க வேண்டும். சைவ சமயத்தில் உள்ளவர்கள் தான் தங்களை தாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அந்த விழிப்புணர்வை கொடுக்க வேண்டியது தான் என்னுடைய கடமை. அரசியலுக்குள் போனால் இதை செய்ய முடியாது. அரசியலுக்கு அப்பால் மக்களினுடைய விழிப்புணர்வே நாங்கள் சைவர்கள் நாங்கள் சிவபெருமானை வழிபடுபவர்கள் அவருடைய அருளை நாடுபவர்கள். அதற்கு எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் வேறொருவரும் வரக்கூடாது. சைவசமயத்தை இந்த வீறுபெறு அடைவதற்கு எவ்வாறு விட்டுச்சென்ற பெரும் நிலை பெறுமாறு என்னிதியே நெஞ்சே நீ வா நித்தமும் எம்பிரானுடைய கோவிலிற்கு புணர்வதிலும் அழகிட்டு மெழுகிட்டு பூமாலை புனைந்தேர்த்தி புகழ்ந்து பாடி தலையாற கும்பிட்டு கூத்துமாடி செங்கரா என்று பாட வேண்டும் ஒவ்வொருநாளும் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவாரம் சொல்கின்றது. நம் முன்னோர்கள் எழுதியிருக்கிறார்கள். "நிலைபெறுமாறு என்னிதியே" நீ என்னத்துக்காக ,தையெல்லாம் செய்கிறாய் உன்னுடைய மனம் ஒடுங்கி நீ பிறவியிலிருந்து விடுபடுவதற்கு முத்திநிலையை நீ அடைய வேண்டுமானால் "நிலைபெறுமாறு என்னிதியே" அப்படியேயானால் நீ போற வழியில் போ "நெஞ்சே நீ வா" வீடே வா பொருளே வா மனதில் ஒரு வலிமை வரும் "நெஞ்சே நீ வா" அதைத்தான் நான் சொல்லுகின்றேன். மக்களுடைய மனதிலே உறுதிபெற வேண்டும். மக்களின் மனங்களில் மாற்றம் பெற வேண்டும் அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபெறவேண்டும் விடுதலை பெற்றவர்கள் என்று உணர வேண்டும்.

இந்த வரிகளை மக்கள் மனதில் விதைக்கின்ற பணியை ஏன் விதைக்கின்றோம் என்றால் அவர்கள் நிலைபெறுமாறு என்னுதியே நெஞ்சே நீ வா என்று அழைக்க வேண்டும் தங்களுடைய பிறவிப்பலனை எய்ய வேண்டும் அருள் பெற வேண்டும். ஒரு புலவர் கேட்கின்றார் யான் இறப்பவை என்பான் உன்னிடம் நான் என்னப்பா கேட்கிறேன் பொண்ணா பொருளா போகமா யாம் இறப்பவை என்பான் பொண்ணும் பொருளும் போகவுமல்ல அன்பும் அரணும் அருளும். நான் சொல்லும் வரிகள் அனைத்தும் எழுதப்பட்ட காலம் இப்பொழுதல்ல.

2000 ஆண்டு வரலாரை நான் கூறிக்கொண்டிருக்கிறேன். நாகரீகத்தில் நாங்கள் வளர்த்துக்கொண்டு போகின்ற படிப்படியாக நாங்கள் செதுக்கிக்கொண்டு போகின்ற நல்லதையே செய்கின்ற சமுதாயத்தை அமைத்துக்கொண்டு போகின்ற வரலாற்றை விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் சிவசேனையினுடைய நோக்கங்கள் மக்கள் மனம் உறுதியடைய வேண்டும். பணிவோம் அல்லோம் என்ற கண்ணோட்டம் எமனுக்கும் அஞ்ச மாட்டோம் என்ற நிலை வரவேண்டும். நாங்கள் யாரிற்கும் குடியல்லோம்.

**தொடரும்...**

**நேர்காணல் :- இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரும் தமிழர்களின் தீர்வு நிலையும்

ஐ.நா மனித உரிமை பேரவையின் 46 வது கூட்டத் தொடர் பெப்ரவரி 22 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமான நிலையில் இலங்கை தொடர்பான பூச்சிய வரைபு தீர்மானம் தொடர்பில் இணை அனுசரணை நாடுகளின் உறுப்பினர்களுக்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் ஓர் மேன்முறையீடு செய்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அக்கடிதத்தில் இவ் பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் இலங்கையை சர்தேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ICC) பாரப்படுத்தலை உள்ளடக்குமாறு கோரி இக்கடிதம் அனுப்பப்பட்டது.

இப் பூச்சிய வரைவு தீர்மானத்தில் இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழர்களை கொத்து கொத்தாக கொன்றமை மற்றும் தமிழ் பெண்களை பாலியல் வல்லுறவு புரிந்தமை சரணடைந்தவர்கள். காணாமல் ஆக்கப்பட்டமை அடங்கலாக இலங்கை இராணுவத்தினரால் புரியப்பட்ட கொடூரமான குற்றங்களின் பொருட்டான சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலை பூர்த்தி செய்த வகையில் இவ் வரைபு அமைந்துள்ளதுடன் அது இலங்கை அரசையும் அதன் படைகளையும் காப்பாற்றும் முகமாகவும் கால அவகாசத்தை மேலும் வழங்குவதாகவும் அமைந்துள்ளதென தமிழர்தரப்பு குற்றம் சாட்டியுள்ளன. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் போதுமான ஆதரவு இல்லாமையால் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) பாரப்படுத்த முடியாது என பிரித்தானியா திட்டவட்டமாக கூறியுள்ளது. இவ்வாறு ஐ.நா கூட்டத்தொடர் தமிழர்களுக்கு கையேறு நிலையாக உள்ள நிலையில் தமிழர்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் தமிழர் கட்சிகள் காலனித்துவ ஆட்சியின் விசுவாசிகளாக உள்ளவரை தமிழர்களுக்கான நீதி காணல் நீர்தான். பிரித்தானியா எமக்கு நீதி வழங்கும் இந்தியா எம்முடன் நிற்கும் அமெரிக்காவில் ஆட்சி மாறியுள்ளது. அது தமிழர்களுக்கு சாதகமாக அமையும் என வெறும் வாய் மென்று துப்பும் இவ் தமிழ் அரசியல் கோமாளிகள் இதுவரை தமிழர்களுக்கு எதுவித உருப்படியான விடயங்களையும் செய்யவில்லை.

ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பமாக இருந்த சில தினங்களில் தமிழர் பரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே பேர்வையில் இணைய மக்களுக்கு காதில் பூச்சுற்றி பின்னர் அவர்களின் கொள்கை எம்மால் இணைய முடியாது என ஒரு கட்சியும் அவர்களின் சுயநல செயற்பாடு பிடிக்கவில்லை அதனால் நாம் விலகுவதை ஓர் கட்சியும் பல திருகுதாள நாடகங்கள் போடுகின்றார்கள். இந்நிலை இக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் நாடுகளை தமது பக்கம் திருப்பிவிடும் பிரித்தானியாவில் வாழும் அம்பிகா செல்வக்குமார் என்ற தாய் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்தி வரும் நிலையில் அதற்கு ஆதரவாக வடகிழக்கு பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சர்வமத தலைவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் என பலரும் பங்கு பற்றி தொடர்ச்சியாக சுழற்சி முறை உண்ணா விரதம் இடம் பெற்று வருகின்றது.

நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரில்தமிழர்களுக்கான நீதிகிடைக்க தொடர் சாத்விக அறவழி போராட்டங்களை தமிழர்கள் தேசமெங்கும் அத்துடன் புலம் பெயர் தேசங்களிலும் நடாத்தி தீர்வை தமிழர்கள் சார்பாக மாற்ற ஆக்கபூர்வமாக செயற்பட அணைத்து தமிழ் கட்சிகளும் கட்சி பேதமின்றி இணைவதுடன் சர்வமத தலைவர்களை தமிழர்கள் அமைப்புகள் புலம் பெயர் அமைப்புகள் என அனைத்தும் ஒருகிணைந்து செயற்பட வேண்டிய காலமிது இதை சரியா கணித்து செயற்பட தவறுவோம் ஆயின் வரும் ஆண்டுகளில் வரும் கூட்டத்தொடர்களில் தமிழர்களுக்கு அப்படியொரு பிரச்சனை அழிவுகள் இடம்பெற்றதா? என்ற கேள்வி ஐ.நாவில் கேட்கும் காலம் வரும். ஆகவே காலம் தாழ்த்தாமல் ஓரணியில் இணைந்து செயற்பட்டு எமக்கான தீர்வை பெற உறுதி பூணுவோம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**139**

### வேவின் போது அவசியம் அறியப்பட வேண்டியவை

எதிரி. எங்கே அவன் இருக்கின்றான், எவ்வளவு தொகையில், எவ்வாறு அவனது படைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன, எவ்வாறான செயற்பாடுகளுக்கு அவன் தயாராகின்றான் போன்றன. எங்கே எதிரியின் கட்டளையகம், எரிபொருள் சேமிப்புகள், உணவுப்பொருட்கள் ஆகியன அமைந்துள்ளன, அதிகாரிகள் எங்கே இருக்கின்றார்கள் போன்றன.

பிரதேசம். முறைவாக எதிரியை எவ்வாறு நெருங்கலாம். வீதிகள், பாலங்கள் போன்றன எவ்வாறான நிலையில் இருக்கின்றன. இங்கே எவ்வகையான சமர்க்கருவிகளைப் பயன்படுத்துவது மிகச் சிறந்தது போன்றன.

வட்டாரத்தின் மக்கள். மக்களின் அரசியல் மனநிலை. பாசிச ஆக்கிரமிப்பாளர்களுடனான அம்மக்களின் உறவுநிலை. கேரில்லாக்களுக்கு உதவி புரிகின்ற நம்பிக்கையான ஆட்களை எங்கே பிடிக்கலாம் போன்றன.

### எப்போது வேவுக்குச் செல்லுதல்

வேவுக்குச் செல்ல மிகவும் சிறந்த நேரம் அதிகாலைக்கு முந்திய பொழுதாகும். இந்நேரத்தில் எதிரி முகாமில்காவற்கடமையாளர்களும் காவலாளர்களும் கூடுதலாகத் தூக்கக் கலக்கத்தில் இருப்பார்கள். அவர்களது கவனம் மந்தமடைந்து போயிருப்பதுடன் அவர்களால் அவதானிப்பதும் கடினமாக இருக்கும்.

இரவு, புகார், சீர்கெட்ட காலநிலை - இவையாவும் வேவுகாரனின் நம்பிக்கைமிகு உதவியாளர்களாகும்.

### சந்தடியின்றி நகர்

தரையில் கால் வைக்கும் போது குதிக்காலையன்றி முழுப் பாதத்தையும் தரையில் வை. இவ்வாறாக வைக்கின்ற உனது காலடிச் சத்தம் கேட்காது. கடின தரையில் முதலில் கால்விரல்களைக் கொண்ட நுனிக்காலை நிலத்தில்வை, பின்னர் மெதுவாகக் குதிக்காலைக் கீழே இறக்கு.

மென்மையான தரையில் மறுவளமாக குதிக்காலை முதலில் வை, பின்னர் மெதுவாகச் சத்தமின்றி முழுப் பாதத்தையும் வை. புற்களுக்குள்ளால் நகரும் போது கடின தரையில் நடப்பது போலக் காலெடுத்துவை. இதன் போது புற்களின் உயரத்திற்கு மேல் காலைத் தூக்கு. இல்லையேல் சரசரவென்ற ஒலி எழுப்பப்படும்.

### தும்மாதே, சத்தமாக இருமாதே

வேவின் போது உனக்குத் தும்மல் வந்தால், மூக்குத் தண்டைப் பலமாகப் பற்றிப்பிடி. உன்னால் கட்டுப்படுத்த முடியாமல் போனால் வேகமாகத் தலைக்காப்பைக் கழற்றி அதனுள் முகத்தைப் புதை பின்னர் பலமாகத் தும்மு. இருமலையும் அவ்வாறே தொப்பிக்குள் இருமிக்கொள்.



### பள்ளத்தாக்கை வேவுபார்த்தல்

முதலில் பள்ளத்தாக்கை நெருங்கி அதனது விளிம்புப் பகுதிகளில் எதிரி இல்லையா என்பதைப் பரிசோதி. பள்ளத்தாக்கின் மேல் விளிம்பைக் கவனி. பின்னர் கீழே இறங்கிப் பள்ளத்தாக்கின் தரையைக் கண்காணி. இறுதியில் அதன் எதிர் விளிம்பையும் பரிசோதி.

### கிராமத்தை வேவுபார்த்தல்

கிராமத்தை வேவுபார்க்கும் போது அந்தக் கிராமத்தில் வசிக்கின்ற யாராவது அறிமுகமுள்ள நம்பிக்கையான மனிதனொருவனின் உதவியை நாடுவது நல்லது. அவ்வாறான மனிதன் இல்லையெனில் கெரில்லா வீரன் தானே செல்ல வேண்டும்.

கிராமத்தை மிக அவதானமாக நெருங்கு. அங்கு எதிரி இல்லையென்பதை உறுதிப்படுத்திக்கொள்.

கட்டடங்களுக்கு முகப்புப் பக்கத்தால் செல்லாதே, மாறாக மறுவளமாகச் செல், அதாவது தொழிற்கூடங்கள், வாசல்கள், வீட்டுத்தோட்டங்கள், தோட்டங்கள் போன்றன அமைந்துள்ள பக்கங்களிலிருந்து செல்.

வீட்டுக்குள் நுழையும் போது, கையெறிகுண்டைத் தயார்நிலையில் வைத்திரு. நீ உள்நுழைந்ததும் கதவை இறுக்கமாகப் பூட்டிக்கொள்ளாதே. வாசலில் காப்பளிப்பவனொருவனை நிறுத்திவை.

வீட்டிற்குள் ஆட்கள் இருந்தால், முதலில் அதனது உரிமையாளனைக் கூப்பிட்டு, அவனை விசாரி. எப்பொழுதும் சாளரங்களுக்குள்ளிருந்தும் கதவுகளுக்குள்ளிருந்தும் உன்னைச் சுடமுடியாதவாறு நின்றுகொள்.

மக்கள் வாழ்விடத்திலிருந்து வெளியில் வந்து, உனது பிரதான நகர்வுத் திசைக்கு எதிர்த்திசையில் செல்.

### வீதியை வேவுபார்த்தல்

வீதியைப்பற்றிப் பின்வருவனவற்றை அறிந்திருக்க வேண்டும். வீதி தார்போடப்படாமலும் சீமெந்து போடப்படாமலும் இருக்குமானால் அதனது தரை எவ்வாறானதாக இருக்கின்றது மணல் தரையா அல்லது கடின தரையா வீதியின் அகலம் - காலடிக் கணக்கில் எங்கே பாலங்கள் இருக்கின்றன, எவ்வகையான பாலங்கள் - மரம், இரும்பு, சீமெந்துக் கல்லு, பாலங்கள் பழுதடைந்துள்ளனவா அவற்றின் அளவுகள் எவ்வாறான பிரதேசங்களினூடாகப் பாதை செல்கின்றது - திறந்த மூடிய உலர்ந்த தரை சதுப்பு நிலம் எவ்வாறான எதிரியின் படைப்பிரிவுகள் பாதையால் செல்கின்றன - காலாட்படை, குதிரைப்படை, வாகனத்தொடரணி, ராங்கிகள் போன்றன.

### ஆற்றை வேவுபார்த்தல்

ஆற்றை நெருங்கியதும் கரையைக் கவனமாகஆராய்-செங்குத்தானதா அல்லது சாதாரண சாய்வானதா, மூடியதா அல்லது திறந்ததா, நீரடித்தரையைக் கண்டறி - மணல் தரையா, கல் தரையா, சேற்றுத்தரையா, எங்கே பாலங்கள் இருக்கின்றன, எவ்வாறானவை, எவ்வளவு அகலம் ஆகியவற்றை அவதானி, எங்கே ஆற்றுக்கடவைகள் இருக்கின்றதென்பதையும் அவற்றின் அகலங்களையும் அறிந்துகொள்.

துணைக்கருவிகளின் உதவியுடன் ஆற்றின் ஆழத்தையும் அகலத்தையும் நீரோட்டத்தின் வேகத்தையும் கணித்துக்கொள். ஆழமற்ற ஆற்றுக்குள்ளால் கடந்து செல்லும் போது, குறிப்பாக ஆற்றினூடாகச் செல்கின்ற நடைபாதைகளில் தடயங்களை விடாமல் செல்ல முயற்றிசெய்.

### எதிரியை இனங்காணத் தெரிந்துகொள்

எதிரியின் ,ருப்பைக் கண்டறிவதற்கான, அவனது துணை அமைப்புக்களின் அமைவிடங்கள் போன்ற பலவற்றைக் கண்டறிவதற்கான அடிப்படை அறிகுறிகளை வேவுகாரன் அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# தமிழர்களின் தொடர் சாத்வீக போராட்டங்களும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரும்

தமிழர்களின் தாயகம் நோக்கிய போராட்டம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் உலக வல்லரசுகளின் உதவியுடன் மௌனிக்கப்பட்டது. அந்த இறுதிப் போரில் ஏற்பட்ட மனிதப் பேரவலமும் அதில் ஏற்பட்ட இரத்த வாடையும் கந்தகவெடி வாசனையும் பிஞ்சுக் குழந்தைகளின் மரண ஓலங்களும் கொத்துக்குண்டுகளாலும் ஆட்லறித் தாக்குதல்களும் கோரமான விமானக்குண்டு வீச்சுக்களாலும் சதை துண்டங்களாக பிய்த்தெறியப்பட்ட எம் இனத்தின் உறவுகளின் இறுதி நேர மரண விக்கல்களும் அவ்விடத்தில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு இன்றுவரை ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் போராடி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கண்ணீர் துளியில் விழும் அவலங்களின் சாட்சிகளும் இவற்றிற்கான நீதி தேடி அலையும் ஒட்டுமொத்த தமிழினத்தின் கையேறு நிலையும் இந்த ஐ.நா மனித உரிமையின் 46 வது கூட்டத்தொடரிலும் தொடர்கதையாக செல்லும் ஓர் அவலநிலை தமிழ் மக்கள் தமது தாயம் நோக்கிய போராட்டங்களில் பல கட்டங்களில் பலவழிகளில் சாத்வீக போராட்டங்களை முன்னெடுத்த வரலாறுகள் பல உள்ளன.

காலத்தின் தேவையறிந்தும் சிங்கள மக்கள் முதல் கொண்டு உலக வல்லரசுகள் வரையும் தமது போராட்டத்தின் நியாயபூர்வ தன்மையை விளக்குவதற்காக பல வடிவங்களில் சாத்வீக போராட்டங்கள் இடம்பெற்றன. ஆரம்பகால எமது தமிழ் தலைமைகளான தந்தை செல்வநாயகம் தொடக்கம் இன்று ஐ.நா வின் கவனத்தை தமிழர்கள் பக்கம் திருப்புவதற்காக சாகும் வரை உண்ணாநோன்பு இருக்கும் புலம்பெயர் தமிழ் உறவான அம்பிகை செல்வக்குமார் அவர்களின் போராட்டம் வரை தொடர்ந்து செல்லுகின்றது. தந்தை செல்வா முதல் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் போன்றோர் இலங்கை பௌத்த பேரினவாத அரசுகளுக்கு எதிராக சுதந்திரமடைந்த நாள் தொட்டு தமிழர்களுக்கான நீதி கோரி பல அகிம்சை ரீதியான போராட்டங்களை மேற்கொண்ட பொழுது சிங்கள இனவாத அரசுகள் அப் போராட்டங்களை எல்லாம் இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது.

இதனாலேயே சாத்வீக போராட்டங்களால் இவ் பேரினவாத சிந்தனை கொண்ட அரசுகளுடன் பேசி பயனில்லை என்ற முடிவுடன் ஆயுதப் போராட்டத்துக்கு தமிழினம் திருப்பியது. ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்ற காலங்களிலும் பல அகிம்சை போராட்டங்கள் இடம்பெற்றன. 1987 ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் இலங்கைக்கு அமைதிப்படை என்ற பெயரில் வந்து தமிழ் மக்கள் மீதும் போட்டுக்கொண்ட ஒப்பந்தங்களையும் மீறி செயற்பட முற்பட்ட பொழுது இந்தியா அரசுக்கு முதலில் அகிம்சை ரீதியில் புரியவைக்க விடுதலைப் புலிகள் முடிவெடுத்தனர். உலகத்துக்கு அகிம்சை வழியை போதித்த நாடு என்ற வகையிலும் உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடு என்ற அடிப்படையிலும் பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து விடுதலை பெற அன்று அகிம்சை ரீதியாக போராடி வெற்றி கண்ட நாடு என்ற வகையிலும் அந்த அகிம்சை போராட்டத்தை நடாத்திய காந்தி அவர்களை தமது தேசத்தின் தந்தையாக போற்றுவதாலும் விடுதலைப்புலிகள் அகிம்சை வழிப்போராட்டத்தை ஆரம்பித்தனர். உலகின் முதல் நீராகாரம் அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து தனது மக்களுக்காக ஈகத்தியாகம் புரிந்த திலீபன் அவர்களின் உண்ணாவிரதப்போராட்டத்தை அன்றைய இந்திய அரசும் அதன் பரிவாரங்களும் எள்ளி நகையாடியதுடன் அப்போராட்டத்தை கொச்சைப்படுத்தியதுடன் திலீபன் என்ன மகாத்மா காந்தியா என்று எள்ளி நகையாடியது. இறுதியில் திலீபன் அவ் அகிம்சை போராட்டத்தின் முடிவில் தியாக மரணமடைந்தார். உலகமே இந்தியாவை பார்த்து ஏளனம் செய்தது இந்தியாவும் வெட்கி தலைகுனிந்தது. அன்று திலீபனை பார்த்து மகாத்மா காந்தியா என்று எள்ளி நகையாடிய இந்தியா ஆம் திலீபன் மகாத்மாவைவிட பலபடி மேலானவர் அன்று புலிகளும் தமிழ் மக்களும் ஏன் திலீபன் கூட ஒன்றை மறந்துவிட்டான் அன்று மகாத்மா காந்தி அகிம்சை வழியில் நீதி கேட்டு போராடியது பிரித்தானியா என்னும் வெள்ளை இனத்திடம் ஆம் அவர்கள் அகிம்சையை மதித்து காந்தியின் போராட்டத்துக்கு மதிப்பளித்து சுதந்திரத்தை கொடுத்தனர். திலீபனும் புலிகளும் மக்களும் யாரிடம் அகிம்சை நீதி கேட்டு போராடினார்கள் இந்தியாவிடம் பிரித்தானியரால் காப்பாற்றப்பட்டு சுதந்திரமளிக்கப்பட்டு இந்திய மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட தமது தேசத்தின் தந்தையை சுதந்திரமடைந்து ஒரு வருடம் கூட காப்பாற்ற முடியாமல் சுட்டு படு கொலை செய்த ஈன நாட்டிடம் அகிம்சை கோரி போராடியது. உண்மையில் ஓர் மடத்தனமான விடயமாகும்.

திலீபனின் போராட்டத்துடன் மட்டக்களப்பில் அன்னை பூபதி அவர்களும் நீராகாரம் அருந்தி உண்ணா நோன்பு இருந்து ஈகத் தியாகம் புரிந்தார். ஆனால் இவ்வாறான அகிம்சை வழி தியாக போராட்டங்கள் அப்பொழுது எமக்கான விடிவைத் தரவில்லையாயினும் மக்கள் ஓர் புரட்சிகரமான தாயகம் நோக்கிய பயணத்துக்கு பெரும் உந்து சக்தியாக அப் போராட்டங்கள் அமைந்தன. அப் போராட்டங்களை தொடர்ந்து பல அகிம்சை போராட்டங்கள் எம் மண்ணில் இடம் பெற்றன. இராணுவ ஒடுக்குமுறைகள் பொருளாதாரத் தடைகள் விமானக் குண்டு வீச்சுகளுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைகளுக்கு எதிராக என பல போராட்டங்கள் மக்களால் முன்னெடுக்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு பதவியேற்ற கோட்டபாய ராஜபக்ச அவர்களின் ஆட்சியில் இடம்பெற்றுவரும் இராணுவ அடக்குமுறைகள் தமிழர்களுக்கான உரிமைகள் பறிக்கப்படுதல் தொன்மையான அவர்களின் வாழ்விடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் அபகரித்தல் முஸ்லிம் மக்களின் ஜனாசா எரிப்பு விவகாரம் மலையக மக்களின் சம்பள முரண்பாடுகள் என்பனவற்றை கண்டித்தும் அதற்கான நீதி கோரியும் சகல இன மதத் தலைவர்களும் பொதுமக்களும் தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் பல்கலைக்கழக மாணவர்கள் மலையக தலைவர்கள் என எல்லோரும் ஒரு முகப்பட்டு இவ் அரசுக்கெதிரான ஓர் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என நடாத்தி ஓர் ஐக்கியப்பட்ட எழுச்சியை உருவாக்கி காட்டினார். இப் பேரணியை தடுக்க அரசு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டது.

ஆனால் எழுச்சி பேரணி பொலிகண்டியை



சென்றடைந்தது இப் பேரணி சிங்களத் தலைமைகளுக்கு ஓர் செய்தியை கூறி நின்றது. அடக்கி ஒடுக்கப்படும் இனம் அந்த அடக்குமுறைகளை உடைத்தெறிந்து காட்டாற்று வெள்ளம் போல் திரண்டு வந்தால் அதனை எந்தவொரு இராணுவ சக்தியாலும் தடுக்க முடியாது என்பதுடன் சிறுபான்மை இனத்தின் அபிலாசைகளை தீர்க்க முன் வரவேண்டும் என அரசுக்கு ஒரு அழுத்தத்தை பிரயோகித்து நின்றது இவ் பொலிகண்டி பேரணி. ஆனால் அரசானது சாத்வீக வழியில் போராடிய மக்களுக்கு உதவியாக நின்ற தமிழ் அரசியல் தலைமகள் அனைவரிடமும் போராட்டம் முடிவுற்றதில் இருந்து தொடர் விசாரணைகளும் பயமுறுத்தல் செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான போராட்டங்கள் இனி வரும் காலங்களில் மேற்கொள்ள எண்ணக் கூடாது என்ற அடிப்படையில் இவ் இனவாத அரசு தனது செயற்பாட்டை செய்து வருகின்றது.

இவ் அரசுக்கெதிராக சிங்கள மக்கள் கடந்த சில நாட்களாக பெரும் போராட்டங்கள் நடாத்தி வருகின்றன. கொழும்பு துறைமுக பிரச்சனை ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கான தீர்வு சுகாதார ஊழியர்கள், அரச போக்குவரத்து ஊழியர்கள், தொடரூந்து ஊழியர்கள் என பல போராட்டங்கள் இடம்பெற்ற பொழுதெல்லாம் கண்டும் காணாமலும் இருக்கும் இவ் அரசு தமிழர்களின் சாத்வீக போராட்டங்களை ஒடுக்கி நசுக்க முயற்சிப்பதானது ஒரேநாடு ஒரே சட்டம் என்ற வேத வாக்கியம் சிங்கள மக்களுக்கு மட்டும் தான் அது தமிழர்களுக்கு இல்லை என்றே மறைமுகமாக சொல்லப்படும் உண்மையாகும் இன்று ஐ.நா மனித உரிமை பேரவையின் 46 வது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் இக் கூட்டத்தொடரில்லாவது தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் அதனை உலக நாடுகள் ஓர் அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க வேண்டும் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெற்ற பேரவலத்துக்கும் அன்று கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்று பலதரப்பினர் பல வழிகளிலும் போராடி வருகின்றனர். இம் முறையும் தமிழர்களுக்கான தீர்வில் ஓர் கொதிநிலையற்ற தன்மையே காணப்படுகின்றது.

தமிழர்களுக்கான ஓர் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஆசிய ஐரோப்பிய வல்லரசுகள் முதல் கொண்டு ஏனைய நாடுகள் வரை செயற்படவில்லை அவர்கள் தமிழர்கள் மீது எதுவித அக்கறையும் இல்லை மாறாக இலங்கை தமது கைகளை விட்டு விலகி செல்லாமல் இருக்கவும் சீனாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தி செல்லாமல் தடுக்கவுமே அவர்கள் முயற்சிக்கின்றனர். இலங்கையின் அமைவிடத் தன்மை ஓர் மகத்தானது அந்த அமைவிடத்தன்மையை இலங்கை அரசியல் தலைமைகள் காலம் காலமாக மிகச் சாதூரியமாக கையாண்டு வெற்றி கண்டு வருகின்றனர். இவ் அமைவிடமும் அதன் பூகோளத் தன்மையும் உலக வல்லரசுகளை தனது காலடியில் வைத்திருக்க முடிகின்றது.

இம்முறையும் இதனை வைத்தும் மற்றும் சீனாவின் நட்பை வைத்து தனது இராஜதந்திர காய் நகர்த்தலை அது மேற்கொள்கின்றது. ஒரு பக்கம் விழி பிதுங்கிய நிலையில் இந்தியாவும் மறுபுறம் அமெரிக்காவும் செயலற்று நிற்கின்றன இருந்த பொழுதிலும் உலக வல்லரசுகளை தமது பக்கத்துக்கான நியாயத்தை புரிய வைக்கவும் இழப்புக்களுக்கான நீதியை பெறவும் புலம்பெயர் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் அகிம்சை போராட்டங்களில் குதித்துள்ளனர். பிரித்தானியாவில் இடம்பெறும் போராட்டம் ஓர் சரியான நேரத்தில் சரியான வழியில் எடுக்கப்பட்டுள்ள போராட்டமாகும். இவ் சாகும் வரை உண்ணா நோன்பு போராட்டத்துக்குபலபுலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் தமது ஆதரவையும் தமது ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். அத்துடன் வடகிழக்கு பகுதிகளிலும் அப்போராட்டத்துக்கு ஆதரவாக தொடர் சுழற்சிமுறை அகிம்சை போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போராட்டங்கள் தொடராக வடகிழக்கு பிரதேசமெங்கும் ஒலிக்க வேண்டும் அத்துடன் புலம்பெயர் தேசமெங்கும் வாழும் புலம் பெயர் மக்கள் புலம் பெயர் அமைப்புகள் எல்லாம் ஓரணியில் திரண்டு அவ் சாகும்வரையான உண்ணாநோன்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதுடன் புலம் பெயர் தேசம் எங்கும் இவ்வாறான உண்ணாநோன்பு போராட்டங்கள் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டும் இந்தியாவிலும் ஈழ உணர்வாளர்கள் எமது இனத்தின் விடுதலையை வைத்து அங்கே அரசியல் செய்வதை இனியாவது விட்டு இக்காலநிலைமாறுகால அரசியலைபுரிந்து ஐ.நா மனித உரிமை பேரவையில் தவித்து நிற்கும் தமிழர்களுக்கான நீதி கிடைக்க போராட முன்வாருங்கள் என்பதுடன் வடகிழக்கில் உள்ள சகல தமிழ் அரசியல் தலைமைகளும் அரசின் அடக்குமுறைகள் கண்டு ஒதுங்கி நிற்காமல் ஓரணியில் நின்று எமது இனத்தின் விடிவை பெற்று தரவும் ஐ.நாவில் ஓர் தீர்வைப்பெறவும் முன்வாருங்கள் என அனைத்து தமிழினமும் வேண்டி நிற்கின்றது.

**தாயகத்தான்**

# இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலும் மூடி மறைக்கப்படும் உண்மைகளும்



இலங்கையில் மூன்று தசாப்த காலமாக தமிழர்களின் தன்னாட்சி உரிமை கோரிய போராட்டம் காரணமாக பல இலட்சக்கணக்கான உயிரிழப்புக்களும் சொத்தளிவுகளும் என ஒட்டுமொத்த ரணத்தாள் ஆறாத நிலையிலும் அந்த கோர யுத்தங்களின் வடு தமிழர்களின் மனங்களில் ஆறாத நிலையிலும் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூட தமிழர்களின் வாழ்வில் இதுவரைஎவ்விதவிடிவுமின்றிதுயர்தோய்ந்த நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை கொண்டு செல்லும் நிலையிலும் ஒட்டுமொத்த இலங்கையில் வாழும் இனங்கள் அந்த யுத்தத்தின் கொடூரமும் அந்த யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கி ஒருவாறு மீண்டுவரும் நிலையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒட்டு மொத்த இலங்கை வாழ் இனங்களையும் அதிர்ச்சிக்கும் துயரத்துக்கும் உள்ளாக்கிய அந்த சம்பவம் ஆம் இயேசுபிரான் பாவிகளுக்காக தன் உயிரை சிலுவையில் செலுத்தி சகலருடைய பாவங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரணித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் தினம் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் உணர்வு பூர்வமாகவும் மிகவும் மகிழ்ச்சியான நாளாகவும் கொண்டாடப்பட்டுக்கொண்டு இருந்த அந்த காலை வேளை இலங்கையிலும் உள்ள கிறிஸ்தவ மக்கள் உற்சாகத்துடன் அந்த அதிகாலை வேளையில் குளித்து புத்தாடை அணிந்து தமது குழந்தைகள் உறவினர்களுடன் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் சியோன் தேவாலயம் சென் செபஸ்ரியன் தேவாலயம் என காலை ஆராதலையில் பங்கு கொண்டு இயேசுபிரான் உயிர்த்தெழுந்த தினத்தை கொண்டாட சென்ற அப்பாவி மக்களுக்கு அன்று நடக்க இருந்த அநீதி தெரிந்திருக்காது.

காலை வேளை திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து ஆலய குருமார்களால் ஆராதனைகள் இடம்பெற்று கொண்டு இருந்த நேரத்தில் பாரிய வெடிகுண்டு சத்தங்கள் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த மக்களை திகைப்படைய வைக்கின்றது அடுத்த நொடி அங்கு ஓர் பிரளயமே நடந்து முடிகின்றது. ஒரே அவல ஓலங்கள் எங்கும் சதை துண்டங்கள் மக்கள் அல்லோலப்படுகின்றார்கள். எங்கும் மனித உடல்கள் இயேசு பிரானின் சிலுவையிலும் சதை துண்டங்கள் பாவப்பட்டு பாரம் சுமப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாரல் தருவேன் என சொல்லிய அந்த புனிதரின் ஆலயத்துக்குள் தரிசிக்க சென்றவர்கள் பிணமானார்கள். இலங்கை அரசு திகைத்துப்போனது ஏன் உலகமே ஓர் கணம் அதிர்ச்சி ஆனது. பாதுகாப்புகள் பலப்படுத்தப்படுகின்றன அன்று ஒரே நாளில் ஐந்து இடங்களில் தற்கொலை தாக்குதல்கள் இடம்பெற்றன. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்று சரியாக 10 வருடங்கள் கடந்த பின்னர் இடம் பெற்ற தாக்குதல் முதலில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மேல் அரசுக்கும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் ஏன் தமிழர் மக்களுக்கும் சந்தேகம் ஏற்படுகின்றது. ஆனால் சில மணித்தியாலயங்களில் தாக்குதலில் உண்மையான சூத்திரதாரிகள் யார் என அடையாளம் காணப்படுகின்றனர்.

உலக பயங்கரவாத அமைப்பான ஐஎஸ். ஐஎஸ் அமைப்பு தான் இத் தாக்குதலை நடாத்தியதாக உரிமை கோரியது உலகில் வாழும் முஸ்லிம் மக்களை பாதுகாக்கவும் உலக வல்லரசான அமெரிக்கா பிரிட்டன் பிரான்ஸ் இந்தியா போன்ற நாடுகள் முஸ்லிம் இனத்தின் மீது செலுத்தும் இன வெறி ஆதிக்கத்தை உடைப்பதற்காகவும் புனிதரான அல்லாவின் பெயரை கொண்டு அப்பாவி மக்களையும் தங்கள் இன மக்களையும் கொன்று குவிக்கும் ஓர் உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்பான இவ் ஐஎஸ் ஐஎஸ் தீவிரவாத இயக்கமானது கடந்த பல ஆண்டுகளாக உலகில் பல இடங்களில் அப்பாவி பொது மக்களை குறிவைத்து தாக்குதல் நடாத்தி தனது அட்டூழியத்தை செய்து வருகின்றது. இவ் அமைப்பில் தனியே முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல வேறு இனத்தவர்களும் அங்கம் வகிக்கின்றனர். தமது நாட்டு அரசு மீது வெறும் பற்றுள்ளவர்களை தமது கீழ் தரமான தீவிரவாத இயக்கத்துக்குள் உள்வாங்கி அவர்களை தற்கொலை தாரிகள் ஆக்கி மக்களை படுகொலை செய்வதே இவர்களின் நோக்கம் அந்த வகையில் இலங்கையில் தமது வெறியாட்டத்தை நடாத்தினர்.

இந்த ஐஎஸ். ஐஎஸ் தாக்குதலில் பெருமளவான கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்டனர். அதிலும் தமிழர்கள் தான் அதிகமாக உயிரிழந்தனர். பாரிய நட்சத்திர விடுதிகள் மற்றும் தேவாலயங்கள் உட்பட சுமார் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் தற்கொலை தாக்குதல் இடம்பெற்றன. இதில் சுமார் 400 பேருக்கு மேலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பல நூற்றுக்கணக்கானோர் அங்கவீனர்கள் ஆயினர். பல பிஞ்சு மழலைகள் புத்தம் புது உடையுடன் தேவாலயத்துக்கு இயேசு பிரானின் உயிர்த்தெழுதலை கொண்டாட ஓடிவந்த அம் மழலைகள் அப் புத்தம் புது உடைகள் பிய்த்தெறியப்பட்டு உடல் சிதறி உயிரிழந்த அந்த பரிதாப நிகழ்வுகள் ஒட்டுமொத்த உலகில் வாழ் மக்களையும் பெரும் துயரத்துக்குள் ஆழ்த்தியது. நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படுகின்றது. வீதிகளில் முப்படையினரும் களமிறக்கப்படுகின்றனர் குறிப்பிட்ட சில தினங்களில் இத் தாக்குதலுக்கு ஒத்துழைப்பு வழங்கியோர் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் என அனைவரும் கைது செய்யப்படுகின்றனர் குறிப்பாக மட்டக்களப்பு காத்தன்குடி பிரதேசத்தில் பலர் கைது செய்யப்டுகின்றனர். அங்கு கைது செய்ய சென்ற சமயம் அங்கு வீடு ஒன்றில் இருந்து ஐஎஸ்.ஐஎஸ் பயங்கரவாத அமைப்பின் சிலர் வீடுகளுக்குள்ளேயே குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இத் தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை ஒன்று அந்த நேரத்தில் இந்திய புலனாய்வு பணியகத்தால் இலங்கைக்கு கொடுக்கப்பட்டு இருந்தது ஆனால் இலங்கை புலனாய்வு பிரிவும் பொலிஸ் திணைக்களமும் அத்துடன் அக்காலகட்டங்களில் ஆட்சியில் இருந்த மைத்திரி - ரணில் அவர்களும் இவ் முன்னெச்சரிக்கையை கணக்கில் எடுக்கவில்லை என்றும் அது தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டதுடன் பல பொலிஸ் உயர் அதிகாரிகள் பல பதவிகள் நீக்கப்பட்டதுடன் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தாக்குதலின் எதிரொழியாக அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நல்லாட்சி அரசு கவிழ்க்கப்பட்டு பொதுஜன பெரமுன கட்சி வெற்றியீட்டி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். சுமார் 40 வருடங்கள் இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் உலக வல்லரசுகளின் உதவியால் போராளிகள் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோரை மண்ணோடு புதைத்து பல்லாயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டு போரை முடிவுக்கு கொண்டு வந்த நடவடிக்கைக்கு பாதுகாப்பு செயலாளராக பதவி வகித்ததுடன் இவ் ஐஎஸ். ஐஎஸ் தாக்குதலை இனி நாட்டில் ஏற்படாமல் தடுக்கக்கூடிய வல்லமை உள்ளவர் என்ற ரீதியில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்று ஆட்சிபீடம் ஏறினார்.

இன்று ஐஎஸ்.ஐஎஸ் தாக்குதல் நடந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாக உள்ளநிலையில் இத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகள் முன்னுக்குப்பின்னான முரண வகையில் காணப்படுவதுடன் அவ் விசாரணை அறிக்கையில் உண்மைத் தன்மையும் நடுநிலையும் அதற்கு சிலரை காப்பாற்ற முனைவதாகவும் இவ் ஆணைக்குழு அறிக்கைகளையும் புலனாய்வு அறிக்கைகளையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதுடன் இவ் விசாரணையை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என இலங்கை கிறிஸ்தவ பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை காட்டமாக கூறியுள்ளார். அத்துடன் ஜே.வி. பியின் அனுர குமார திசாநாயக்கரில்வின் சில்வா போன்றோரும் பல பௌத்த மத குருமாரும் இவ் ஆணைக்குழுவின் அறிக்கை பாரபட்சமானது உண்மைத்தன்மையற்றது மூடி மறைக்கப்படும் தன்மை கொண்டதாகும் என குற்றம் சாட்டியதுடன் சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர். மாறி மாறி வரும் அரசுகள் விடுதலை போராட்டம் இடம்பெற்ற காலங்களில் தமிழ் மக்களுக்கு இடம்பெற்ற அநீதிகளுக்கான தீர்வுகளை இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து காலநீடிப்பை செய்து தமிழர்களுக்கான நீதியை மழுங்கடிக்க செய்யும் கைங்காரியங்களில் அக்காலங்களில் ஈடுபட்டதை போன்று இப்பொழுதும் உலக பயங்கரவாதிகளின் இவ் ஆட்டூழியங்களுக்கு பின்னால் யார் இருக்கின்றார்கள் என்பதை வெளிக்கொணர்வதில் இவ் அரசு ஏன் மௌனம் காக்கின்றது என்றும் ஏன் தயங்குகின்றது என்று இத்தாக்குதலுக்கு பின்னால் அந்த நேரத்தில் இவ் அரசு தான் இருந்துள்ளதா? என்ற சந்தேகம் வலுப்பெற்று வருகின்றது. நல்லாட்சியை கவிழ்த்து தாம் ஆட்சியை கைப்பற்றி இவ் அரசானது இந்த நடவடிக்கைக்கு பின்னால் இருந்துள்ளதா? என்ற சந்தேகம் எதிர்கட்சிகளிடம் தொடக்கம் சாதாரண மக்கள் வரை வியாபித்து வருகின்றது. இதற்கு கட்டியம் கூறுவது மேலான விடயம் ஒன்று உள்ளது. இந்த ஐஎஸ்.ஐஎஸ் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹரான் என்பவர் தமிழர்களின் ஆயுதப்போராட்டம் இடம்பெற்ற இறுதி காலத்தில் பல வழிகளிலும் இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உதவியழித்துள்ளதாக தெரியவருகின்றது.

ஆகவே இவ் ஐஎஸ்.ஐஎஸ் தாக்குதலுக்கும் இப்போதைய அரசுக்கும் தொடர்புகள் உள்ளதா? என்ற பெரும் கேள்வி சகல எதிர்கட்சி தரப்பினரிடமும் உள்ளது. இவ் அரசுக்கு மிகப்பெரும் ஆதரவும் ஆசீர்வாதமும் வழங்கி வரும் கொழும்பு பேராயர் ரஞ்சித்மல்கப் ஆண்டகை அவர்கள் இவ் அரசின் ஆணைக்குழுவை ஏற்கமாட்டேன் என்று சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறுவதானது சற்று சிந்திக்க வைக்கின்றது. அத்துடன் இவ் ஆட்சியை கொண்டுவர முழுப்பலத்தையும் பிரயோகித்த நாங்கள் இவ் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப கால தாமதம் ஆகாது என பௌத்த தேரர்களும் கூறியுள்ளனர். அவர்களும் இவ் அறிக்கையில் நம்பிக்கையற்ற தன்மை காணப்படுவதாக கூறியுள்ளனர். ஆகவே அந்த ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களின் உயிர்களுக்கு அந்த தாக்குதலில் உயிரிழந்த பிஞ்சு குழந்தைகளின் உயிரிழப்புக்களுக்கும் ஓர் நீதி தேவை. இரண்டாண்டுகள் கடந்த நிலையிலும் அதற்கான எவ்வித தீர்வும் இன்றி செல்லும் நிலையில் இதுவும் முள்ளிவாய்க்கால் படுகொலைகள் போல் நீந்துபோகச் செய்யும் செயற்பாடாகவே பார்க்கத் தோன்றுகின்றது.

ஆகவே இனியும் காலம் தாழ்த்தாமல் அந்த புனித நாளில் இடம்பெற்ற படுபாதகம் செயலுக்கான முழு சூத்திரதாரிகளும் அவர்களுக்கு பின்னால் செயற்பட்டவர்களும் மேலும் இவ்வாறான தாக்குதல் இடம்பெறாத வகையிலும் செயற்பட வேண்டும் என்பதுடன்உண்மை நிலையினையும் உண்மையான குற்றவாளிகளையும் மக்கள் முன் நிறுத்தி தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் இதன் மூலமாகவே அந்த தாக்குதலில் இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடையும் என்பதுடன் மக்களின் மனங்களில் இருந்த சந்தேக எண்ணங்களும் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளும் நீங்கும் என்றும் இவ் விசாரணைக்கான நல்லதொரு தீர்வை நோக்கி காத்திருக்கும் ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். உண்மை ஒருநாளும் தூங்குவதில்லை.

**தமிழ் கிறுக்கன்**

# விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்ட முடிவும் வடகிழக்கு தமிழர்களின் பொருளாதார சமுதாய சீரழிவும்

இலங்கையின் வடகிழக்கு தமிழர்கள் தமது தாயகம் சுயநிர்ணயம் கோரி சிங்கள அரசுகளுடன் சுமார் 50 வருடங்களாக போராடி வந்த நிலையில் அவ் ஆயுத அகிம்சை போராட்டங்கள் அனைத்தும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் மண்ணில் முற்றுப்பெற வைக்கப்பட்டது. இவ் 50 வருடகால தாயகம் நோக்கிய போராட்டங்களின் தமிழினம் கொடுக்க முடியாத விலையினை இவ் போராட்டத்துக்கு வழங்கியுள்ளது. எண்ணற்ற உயிர்கள். உடமைகள், சொத்துக்கள் என எண்ணிலடங்கா துயர்களையும் இவ் இனம் சந்தித்துள்ளது.

யுத்தம் முடிவுற்று சுமார் 11 வருடங்கள் முடிவுற்ற பொழுதிலும் அந்த யுத்தம் தந்த வடு இம் மண்ணில் இன்னும் ஆறவில்லை. அந்த யுத்தத்தின் கோரம் இன்னும் அடங்கவில்லை. தென்பகுதி பெரும்பான்மை சிங்கள மக்களின் பொருளாதாரக் கட்டமைப்புடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இன்று வடகிழக்கு தமிழினம் உள்ளது. பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் தான் உள்ளது விடுதலைப்புலிகளின் போராட்டம் இடம்பெற்ற காலங்களில் உயிரிழப்புக்களும் இடம்பெயர்வுகளும் இருந்த பொழுதிலும் சமுதாய சீரழிவுகள், மதுபான பழக்கவழங்கங்கள், வாள்வெட்டுக்கள், ரவுடிஸ்யம், போதைப்பொருள் பாவனைகள், விபச்சாரங்கள், மோசடிகள் என்பன அற்ற ஓர் காலமாக காணப்பட்டது. யுத்தம் கோரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலங்களில் கல்விநிலை மற்றும் கலாச்சார விழுமியங்கள் என்பன உயர்தரத்தில் காணப்பட்டமை மறைக்க முடியாத உண்மை. அக்காலகட்டங்களில் போதைப்பொருள் பாவனை, பாலியல் வல்லுறவு, கொலைகள், கடத்தல்கள் என்பனவற்றிற்கு அதியுயர் தண்டனையான மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவ் தண்டனைகளின் பயத்தினால் அன்று இருந்த சமுதாயம் மிகவும் ஓர் உன்னத நிலையில் இருந்ததை காணக்கூடியதாக உள்ளது. அன்று ஓர் இளம் யுவதி இரவு நேரத்தில் எவ்வித அச்சமின்றி பாதுகாப்பாக சென்றுவர முடிந்தது. அவ்வாறான கட்டமைப்பு ஒன்று அங்கு உருவாகி காணப்பட்டது. ஆனால் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் முற்றும் பெற்றதுடன் வடகிழக்கு தமிழினத்தின் நிலை மிகவும் இழிநிலைக்கு சென்றுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

உலகத்துக்கு கலாச்சார விழுமியங்களையும் கல்வி வேள்வியின் உன்னதத்தையும் பறைசாற்றிய ஓர் இனம் வீரத்தை உலகின் கண்முன் கொண்டு வந்து நிறுத்திய இனம் அடுப்படியில் காலத்தை கழித்த பெண் இனத்தை உலகிற்கு வீர மங்கைகளாக புடமிட்டு காட்டிய தமிழினம் இன்று அதே உலக மக்களால் அசிங்கமாக பார்க்கப்படும் இனமாக மாற யார் காரணம்? இதற்கு யாரை குற்றம் சொல்வது? யார் மேல் குற்றத்தை திணிப்பது? இன்றைய இளம் சமுதாயத்தின் நிலை தான் என்ன? அண்மைக்காலமாக வடகிழக்கு பகுதிகளில் இடம்பெறும் தற்கொலைகள் அது 12 வயது தொடக்கம் 50 வயது வரை இடம்பெறும் கோரம் வட பகுதியில் இடம்பெறும் வாள்வெட்டு கலாச்சாரம், ரவுடிஸ்யம், பாலியல் வல்லுறவுகள், விபச்சாரங்கள் என வடபகுதி மூழ்கிப்போயுள்ளது. யுத்தம் அகோரமாக இடம்பெற்ற காலத்தில் இடம்பெறாத தற்கொலைகள் ஏன் இப்பொழுது இடம்பெறுகின்றன. அது மனவிரக்தியா நவீன தொடர்பாடலின் உச்சமா போதைப்பொருள் பாவனையா எது இதற்கு பின்னால் உள்ளது. இந்த தற்கொலைகளுக்கும் சமுதாய சீரழிவுகளுக்கும் இளம் சமுதாயம் தடம் புரண்டு போவதற்கும் முக்கிய காரணமும் தலையங்கமும் ஆக அமைவது போதைப்பொருள் பாவனை அன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் போதைப்பொருள் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அந்த பாவனை இலங்கைக்குள் வராமல் இருக்க கடலில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. அன்று தென்னிலங்கையில் கூட போதைப்பொருள் பாவனை கணிசமான அளவு கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. கசிப்பு உற்பத்தி கூட முற்றாக வடகிழக்கு பகுதிகளில் தடைசெய்யப்பட்டு இருந்தது. 20 வயதுக்கு குறைந்தவர்கள் சிகரட் பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இவ்வாறு மிக இறுக்கமான நடைமுறைகளால் தான் அன்று இவ்வாறான தற்கொலைகள் பாலியல் வல்லுறவுகள் கொலைகள் இடம்பெறவில்லை. இப்பொழுது இடம்பெறும் தற்கொலைகளுக்கு பின்னால் பாலியல் வல்லுறவுகளுக்கு பின்னால் கொலைகளுக்கு பின்னால் எது உள்ளதென தேடிப்பார்ப்போமானால் அதற்கு பின்னால் இந்த கோரமான போதைப்பொருள் பாவனை தான் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இன்று வடகிழக்கு பகுதிகளில் ஏன் ஒட்டுமொத்த இலங்கையிலும் இந்த போதைப்பொருள் வியாபாரமும் பாவனைகளும் கொடிகட்டிபறக்கின்றன. தற்பொழுதுள்ள அரசு போதைப்பொருளை தடுக்க கடும் நடவடிக்கை எடுத்த பொழுதிலும் அது இதுவரை எதுவித பயனையும் தரவில்லை. இன்று வடகிழக்கு எங்கும் உள்ள இளம் சமுதாயம் இப்போதைப்பொருள் பாவனைக்குள் சிக்கி சின்னாபின்னமாகின்றது. இளவயது காதல் அதுகிடைக்கவில்லை என்றவுடன் தற்கொலை. நவீன தொலைபேசி வாங்க முடியவில்லை என்றால் தற்கொலை. நவீன வகை மோட்டார் சைக்கிள்கள் வாங்க முடியவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வது தற்பொழுதுள்ள குடும்ப பெண்கள் கூட சகிப்பு தன்மையற்ற எளிதில் உணர்ச்சிவசப்படுதல் மற்றவர்களை போல் ஆடம்பரமாகவாழவேண்டும்சினிமாமோகம் சின்னத்திரை மோகம் என அனைத்தினாலும் ஈர்க்கப்பட்டு அதற்கு தடைகளோ அல்லது அவற்றை அடையமுடியவில்லை என்ற மனவிரக்தியிலும் கணவர்மாரின் குடிவெறிகளாலும் அவர்களின் போதைப்பொருள் பாவனைகளாலும் வாழ்வாதாரத்தில் ஏற்படும் இடர் நெருக்கடியால் பல குடும்ப பெண்கள் தற்கொலை செய்கின்றார்கள்.

இதில் மிகவும் வேதனையான விடயம் யாதெனில் தாங்கள் தற்கொலை செய்யும் பொழுது தாம் பெற்ற குழந்தைகளையும் சேர்த்து தற்கொலை செய்வதானது மிகவும் துன்பமான விடயமாகும். அண்மைக்காலமாக வடகிழக்கு பகுதியெங்கும் பல ஆயிரக்கணக்கானோர் தற்கொலை செய்துள்ளனர். இதில் மிக அதிகளவானோர் 15 வயது தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் என புள்ளி விபரங்கள் கூறுகின்றது. இவ் தற்கொலைகளுக்கு பின்னால் காதல் நவீன தொலைத்தொடர்பாடலில் ஏற்பட்ட தொடர்புகளால் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துடன் போதைப்பொருள் பாவனையும் இங்கு மிகப்பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றது. யுத்தத்தால் இடம்பெற்ற மரணங்களினால் மலிந்துபோன தேசம் இன்று யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் இவ்வாறான அநியாய உயிரிழப்புகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

விபத்துக்களால் அண்மைக்காலமாக பல இளம் வாலிபர்கள் வீதியில் தமது உயிர்களை இழந்ததை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் இதற்கு காரணம் பெற்றோர் மற்றும் எமது பொறுப்பற்ற சமுதாயமும் அரசாங்கமும் ஆகும். இளம் வயதினருக்கான நவீன தொடர்பாடல் கருவிகள் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை பிள்ளைகள் கேட்டவுடன் கடனைப்பட்டாவது வாங்கி கொடுப்பதுடன் தாங்கள் கடமை முடிந்துவிட்டதாக எண்ணிவிடுகின்றார்கள். அவர்களால் கண்காணிப்பதில்லை வளர்ந்து விட்டார்கள் என்ற நினைப்பில் அவர்களை சுதந்திரமாக செயலாற்ற விடுவதுடன் தாங்களும் சின்னத்திரை சினிமா நாடகங்களுடன் மூழ்கி போவதால் தங்கள் பிள்ளைகளின் நிலைகுறித்து கவனிப்பதில்லை. மாறிவரும் பொருளாதார தன்மைகளால் அதற்கு ஈடுகொடுத்து செல்வதால் பிள்ளைகளின் நிலைகுறித்து கவனிக்க தவறுகின்றார்கள். இதனால் தான் இவ்வாறான இழப்புக்கள் ஏற்படுகின்றன. குடும்ப பெண்கள் நிலையும் இவ்வாறே உள்ளதும் யுத்தம் தந்த வடுக்களின் காயம் எம் தேசத்தில் இன்னும் ஆறவில்லை பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த போராடி வரும் நிலையில் இப்பெண்களின் வாழ்க்கை துணைவர்மார் குடியும் கும்மாளமுமாக திரிவதால் ஏற்படும் விரக்தியிலும் பிள்ளைகளின் குறைந்த பட்ச ஆசையை நிறைவேற்ற முடியாத விரக்தியில் இவ்வாறு தவறான முடிவுகளுக்கு செல்லுகின்றன.



வடகிழக்கு பகுதிகளில் யுத்த காலங்களில் அரபு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் பெண்களின் அளவு குறைவாக இருந்த பொழுதிலும் தற்பொழுது அது அதிகரித்து காணப்படுகின்றது. இவ்வாறு தமது குடும்ப வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக வெளிநாடு செல்லும் பெண்கள் பலர் அங்கு தம் வாழ்க்கையை தொலைக்கின்றார்கள். வெளிநாடுகளில் அவர்கள் வாழ்க்கையை தொலைக்கும் அதே நேரம் இங்கு அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் உறவினர்கள் நண்பர்கள் தந்தை என்ற உறவுகளால் சிதைக்கப்படுகின்றது. இவ்வாறு மிகப்பெரும் சீரழிவுகள் இடம்பெறுகின்றன. வடகிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தினால் பல பெண்கள் விதவைகளாயுள்ளனர். இவர்களின் பொருளாதார வாழ்வாதாரம் மிக நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது பல பெண்தலைமை குடும்பங்கள் தமது பொருளாதாரத்துக்காகவும் தமது பிள்ளைகளுக்காக போராடி வரும் நிலையில் எமது சமுதாயம் அந்த பெண்களை மிகவும் கீழ்த்தரமாக நோக்குவதுடன் அவர்களின் வேலைகளை கூட கீழ்தரமாக விமர்சிப்பதும் ஒரு சில ஆண் சமுதாய மன்னர்கள் அப்பெண்களை தமது இச்சை பயன்படுத்த முயல்வதும் வற்புறுத்துவதும் என சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இப் பெண்கள் இவ்வாறான போராட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் பிள்ளைகளுடன் தற்கொலை செய்கின்றனர். இவ்வாறு ஆண்கள் ஒருபக்கம் இருக்க பல குடும்ப பெண்கள் கூட சில தவறான செயல்பாடுகளில் ஈடுபடுவதால் மனவிரக்தியடைந்த ஆண் குடும்பஸ்தர்கள் மரியாதைக்கு பயந்து தவறான முடிவுகள் எடுக்கின்றனர். இவ்வாறு தொடர் கதையாகி போயுள்ளது. வடகிழக்கு தமிழ் மக்களின் நிலை இதற்கான முடிவு தான் என்ன இதனை தீர்க்க வழி என்ன முதலில் அரசாங்கம் நாட்டுக்குள் வரும் போதைப்பொருள்களை முற்றாக தடுத்து நிறுத்துவதுடன் அதனை கடத்துவார்கள். அதனை பாவிப்பார்கள் விற்பனை செய்பவர்களுக்கான தண்டனையை அதிகப்படுத்த வேண்டும். மற்றும் குற்றம் இடம்பெற மூல காரணமான போதைப்பொருளை இல்லாதொழிக்க வேண்டும். இளம் சமுதாயத்தின் சிகரட் பாவனையின் வயது எல்லையை அதிகரிக்க வேண்டும். இளம் சமுதாயத்துக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த சுயதொழில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கி கொடுக்க வேண்டும். தமிழ் அரசியல் தலைமைகள் இவ்வாறான பெண் தலைமைக் குடும்பங்களை இனம் கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பாடுபடவேண்டும். அத்துடன் கிராமங்கள் உள்ள மாதர் சங்கங்கள் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் மனநல ஆலோசகர்கள் இவ்வாறான நிலையில் உள்ள பெண் தலைமைக்குடும்ப பெண்களுக்கு உறுதுணையாக நின்ற அவர்களின் விரக்தி தன்மையை போக்க வேண்டும்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புணர்ந்து எம் இனத்தின் இவ் இழிநிலையை போக்க முன்வர வேண்டும். புலம்பெயர் தேசத்தில் உள்ள உறவுகள் தாங்களின் சுயநல நோக்கங்களுக்காக வடபகுதியில் வாள்வெட்டு குழுக்களை உருவாக்கி சமுதாயத்தையும் இளம் சமூகத்தையும் சீரழிப்பதை நிறுத்தி ஆக்கபூர்வமாக தமது நிதிகளை வடகிழக்கு வழங்கி இளம் சமுதாயத்துக்கு தேவையான வேலை வாய்ப்புக்களை உருவாக்கி கொடுக்க முன்வர வேண்டும் என்பதுடன் எம் மக்களின் விடிவுக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் எண்ணற்ற தியாகம் புரிந்த வீர மறவர்களின் தியாகங்கள் மீதேறி எம் இனத்தின் கலாச்சார விழுமியங்களை அழிக்க வேண்டாம். என்பதுடன் வீர மறவர்களும் வீர மங்கைகளும் உதித்த இம் மண்ணில் பிறந்த இளம் சமுதாய வாலிப யுவதிகளே குடும்ப பெண்களே குடும்ப தலைவர்களே பெற்றோர்களே சமூக நலன் விரும்பிகளே சமய தலைவர்களே அரசியல் தலைமைகளே பல்கலைக்கழக சமூகமே அனைவரும் எதிர்சாலத்தில் இவ்வாறான தவறான முடிவுகள் எடுக்காமல் இருக்கவும் இம் மண்ணில் போதைப்பொருள் முற்றாக ஒழிக்கவும் அனைவரும் சமூக பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும் என ஒட்டுமொத்த தமிழினமும் தவறான முடிவுகளால் உயிரை விட்டவர்களின் உறவுகளும் போதைப்பொருள் பாவனையில் சீரழிந்துள்ள குடும்பங்களும் கேட்டு நிற்கின்றது.

*தாயகத்தான்*

# ஐ.நா தீர்மானத்தின் உத்தேச வரைபு பொறுத்து தமிழ்க் கட்சிகளை ஏன் ஒன்றிணைக்க முடியவில்லை?



கடந்த ஜனவரி மாதம் மூன்று தமிழ் தேசியக் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து ஒரு பொதுக்கடிதத்தை தயாரித்து ஐ.நாவுக்கு அனுப்பிவைத்தன. அதில் கூட்டமைப்பு எதுவித எதிர்ப்புமின்றி பங்குபற்றியது. அக்கட்சியின் பேச்சாளர் மூன்று சந்திப்புகளிலும் மிகவும் "கூலாக" இருந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். விக்னேஸ்வரனின் கூட்டமைப்பும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் பல்வேறு விடயங்களில் ஆளுக்காள் மோதிக்கொண்ட பொழுது கூட்டமைப்பு ஒரு அப்பாவி போல தான் எல்லாவற்றுக்கும் தயார் என்பது போல ஒரு தோற்றத்தை காட்டிக்கொண்டு அமைதியாக காணப்பட்டது.இனப்படுகொலை என்பதை அந்தக் கடிதத்தில் இணைப்பதற்கும் அக்கட்சி தயாராகக் காணபட்டது. முடிவில் ஒரு பொதுக்கடிதம் தயாரிக்கப்பட்டு ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் லண்டனை மையமாகக் கொண்டியங்கும் ஓர் ஆவண செயற்பாட்டாளர் என்னிடம் பின்வருமாறு சொன்னார்..." அப்படி ஒரு ஆவணத்தை தயாரிக்க ஒத்துழைக்குமாறு மேற்கத்திய நாடுகளே கூட்டமைப்பிடம் கேட்டிருக்கலாம். அந்த ஆவணத்தை தயாரிக்கும் பொறுப்பை கஜேந்திரகுமார் மற்றும் விக்னேஸ்வரனின் கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருக்குமாறு அவர்கள் கூட்டமைப்புக்கு ஆலோசனையும் கூறியிருக்கலாம். ஏனெனில் ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராக ஒரு அழுத்த பிரயோக உத்தியாக அந்த ஆவணத்தை அவர்கள் பயன்படுத்த யோசித்திருக்கலாம்.அவர்கள் நிறைவேற்ற விரும்பும் ஒரு ஜெனிவா தீர்மானத்தை நோக்கி ராஜபக்சக்களை நிர்பந்திப்பதற்கு தமிழ்த் தரப்பிலிருந்து அவ்வாறான கோரிக்கைகள் வர வேண்டும் என்று அவர்கள் சிந்தித்திருக்கலாம். ராஜபக்ஷக்களுக்கு அழுத்தம் கொடுக்க கூடிய ஒரு பொதுக் கோரிக்கை வரவேண்டும் என்றால் அதை கஜேந்திரகுமாரை இணைத்துக் கொள்வதன் மூலம்தான் தயாரிக்கலாம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த ஒரு பொது உண்மையாகும்" என்று கூறினார்.

இந்த உண்மை கடந்த ஆண்டும் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஓர் ஐக்கிய முயற்சியின் போதும் வெளிப்பட்டது. அந்த பதின்மூன்று அம்ச ஆவணத்தில் தமிழ்த்தேசிய மக்கள்முன்னணி கையெழுத்திடவில்லை. ஆனால் தொடக்கத்திலிருந்து முடிவு வரையிலும் அக்கட்சியின் பங்களிப்பு இல்லை என்றால் அப்படி ஒரு சமரசத்திற்கு இடமற்ற ஆவணத்தைத் தயாரித்து இருந்திருக்க முடியாது என்று சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தார்கள்.

இது ஜனவரி மாதம் தமிழ்க் கட்சிகள் ஜெனீவாவிற்கு அனுப்பிய ஆவணத்துக்கும் பொருந்தும். அதில் முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் நடந்த போது அதில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் அதன் இறுதி வடிவத்துக்கு பெருமளவுக்கு முரணாக காணப்பட்டன.முதலாவது சந்திப்பில் கஜேந்திரகுமார் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில் நடந்த பொழுது அவர் பங்குபற்றினார். சந்திப்பில் அவர் தனது நிலைப்பாட்டை தெளிவாகவும் தர்கபூர்வமாகவும் முன்வைத்தார்.அதன்படி பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அவருடைய அந்தக் கோரிக்கையை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டது. விக்னேஸ்வரனின் அணியும் ஏற்றுக்கொண்டது.மேலதிகமான சில கோரிக்கைகளில் தான் விக்னேஸ்வரன் அணிக்கும் தமிழ்தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையே சில முரண்பாடுகள் ஏற்பட்டன.எனினும் பொதுக் கோரிக்கையை இறுதியாக்கும் போது அந்த முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டன. எனவே "கஜேந்திரகுமார் அந்தக் கூட்டுக்குள் இணைத்துக் கொண்டதால் தான் விட்டுக்கொடுப்பற்ற சமரசத்துக்கு இடமற்ற கோரிக்கைகளை அவர் முன்வைப்பார் என்பது மேற்கத்திய தூதரகங்களுக்கு நன்றி தெரியும். எனவே இது விடயத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்மக்கள் தேசியக்கூட்டணி ஆகிய கட்சிகளோடு இணைந்து அவ்வாறு விட்டுக்கொடுப்பற்ற ஓர் அறிக்கையை தயாரிக்குமாறு மேற்கத்திய தூதரகங்கள் கூட்டமைப்பை ஊக்குவித்திருக்குமா?" என்றும் அந்த ஆவணச் செயற்பாட்டாளர் கேட்டார்.

அவர் மேலும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார். பொதுவாக யு.என்.பி ஆட்சிக்கு வரும்பொழுது தமிழரசுக் கட்சி ஒன்றில் அதன் பங்காளி ஆகிவிடும் அல்லது கள்ளக்காதலி ஆகிவிடும். அதே சமயம் எஸ்.எல்.எப்.பி ஆட்சிக்கு வரும்பொழுது தமிழரசுக் கட்சி பொதுவாக போராளி ஆகிவிடும்.2015 ஆட்சி மாற்றத்தின்பின் அதுதான் நடந்தது. அப்பொழுது கூட்டமைப்பு அதாவது தமிழரசுக் கட்சியை மையமாகக் கொண்ட கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் மறைமுகப் பங்காளியாக விளங்கியது. அப்பொழுது மேற்கு நாடுகளால் முன் மொழியப்பட்ட நிலை மாறு கால நீதிக்கான ஐ.நா தீர்மானத்தின் பங்காளியாகச் செயற்பட்டது. இப்பொழுது எஸ்.எல்.எ.ஃப்.பி கட்சியின் காலத்தில் அதாவது ராஜபக்சவின் காலத்தில் அது போராளி வேடம் தரித்துவிட்டது என்றும் அவர் சொன்னார். அதனால் தான் நிலைமாறுகால நீதி என்ற ஒரு பரிசோதனையைச் செய்தோம். அது தோற்று விட்டது. எனவே இனி பொறுப்புக் கூறலை ஜெனீவாவிற்கு வெளியே கொண்டு போகலாம் என்று இப்பொழுது அக்கட்சி கூறுகிறதா?

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சுமந்திரன் அதிரடிப்படையின் பாதுகாப்பைப் பெற்றிருந்தார்.ஜெனீவாவிற்கு அனுப்பபட்ட கடிதத்தைத்தயாரிக்கும்சந்திப்புகளின்போதும் சந்திப்பு நடைபெற்ற மண்டபங்களுக்கு வெளியேஅதிரடிப்படையும்நின்றது.ஆனால் அண்மையில் P2P பேரணிக்குப்பின் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு விலக்கப்பட்டுவிட்டது. அதன் மூலம் அவர் தமிழ்த்தேசிய அரசியலில் புனிதநீர் தெளிக்கப்பட்டவர் போல தோன்றுகிறார். போராட்டக் களங்களில் அவர் காணப்படுகிறார். இது தேர்தல் தோல்விகளில் இருந்து அவர் பெற்றுக்கொண்ட பாடங்களின் விளைவாகவும் இருக்கலாம். அதேசமயம் கட்சிக்குள் தனது தலைமைத்துவத்தை பலப்படுத்துவதற்காகவும் இருக்கலாம்.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் மூன்று கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கடிதத்தை தயாரிக்கும் முயற்சிகளை எடுத்தபோது கூட்டமைப்பு அதில் முழுமனதாக ஈடுபட்டது. அந்த முதற்கடிதத்தை குறித்து பல்வேறு வகைப்பட்ட விமர்சனங்கள் எழுந்தன. அந்த முதற்கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து கேள்விகள் எழுந்தன. அக்கேள்விகளுக்கெல்லாம் பதிலாக அந்தக்கடிதத்தின் தொடர்ச்சியாக மேலும் சில கடிதங்கள் அனுப்பப்படும் என்று அப்போது கூறப்பட்டது.ஆனால் அவ்வாறு கடிதங்கள் தொடர்ந்து அனுப்பப்படவில்லை ஏன்?

ஏனெனில் கூட்டமைப்பு அவ்வாறு ஏனைய கடிதங்களைத் தயாரிப்பதில் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை.அதற்கு அவர்கள் சொன்ன காரணம் ஜெனிவா கூட்டத்தொடர் தொடங்கவிருக்கும் ஒரு பின்னணியில் ஜெனிவா தீர்மானம் எவ்வாறு அமைகிறது என்பதை பார்த்து அடுத்தடுத்த கடிதங்களைத் தயாரிக்கலாம். எனவே இப்பொழுது அவசரப்பட வேண்டாம் என்பதே.இதனால் முதலாவது கடிதத்தின் தொடர்ச்சியாக அடுத்தடுத்த கடிதங்களை சிவில் சமூகப் பிரதிநிதிகளால் தயாரிக்க முடியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் ஜெனிவா தீர்மானத்தின் பூச்சிய வரைவு வெளிவந்தது. இது ஒரு முதல் வரைபல்ல என்றும் இதற்கு முன்னரே இரண்டு வரைபுகள் உட்சுற்றுக்கு விடப்பட்டன என்றும் கூட்டமைப்பின் உயர் மட்டத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.குறிப்பாக இதற்கு முந்திய வரைபுகளில் முஸ்லிம்களின் விவகாரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அண்மையில் வெளிவந்த பூச்சிய வரைபில்தான் அது அழுத்தமாக சேர்க்கப்பட்டது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.இவ்வாறு முதற்கட்ட வரைபு குறித்தும் அதில் ஏற்படும் மாற்றங்களைக் குறித்தும் கூட்டமைப்புக்கும் தெரிந்திருக்கிறதுஎன்பதுஎதைக்காட்டுகிறது? கூட்டமைப்பு அந்த வரைபைத் தயாரிக்கும் நாடுகளோடு நெருக்கமாகச் செயற்படுகிறது என்பதையா?

இவ்வாறு ஜெனீவாத் தீர்மானத்தை உருவாக்கும் நாடுகளோடு அக்கட்சி நெருக்கமான உறவைப் பேணுமாக இருந்தால் அத்தீர்மானத்தின் பூச்சிய வரைபைக் குறித்து ஏனைய இரண்டு கட்சிகளோடு சேர்ந்து ஒரு பொதுக் கடிதத்தை அனுப்புவது குறிப்பிட்ட நாடுகளுக்கு குழப்பமான சமிக்ஞைகளை வழங்குவதாக அமையும் என்று அக்கட்சி கருதுகிறதா?. ஒருபுறம் அவ்வரைபை உருவாக்கும் மேற்கு நாடுகளுடன் நெருக்கமாகக் காணப்படும் ஒரு கட்சி இன்னொருபுறம் ஏனைய இரண்டு கட்சிகளுடன் இணைந்து அந்த வரைபுக்கு எதிராக ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைப்பது என்பது இரட்டை நிலைப்பாடுதானே? இது காரணமாகவே கூட்டமைப்பு பூச்சிய வரைபுக்கு எதிராக ஒரு பொது ஆவணத்தை உருவாக்குவதற்குப் பின்னடித்ததா?

ஆனால் கடந்த ஜனவரி 15ஆம் திகதி ஒரு பொதுக் கோரிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பிய அக்கட்சிக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. அக்கோரிக்கையை சிறிதேனும் கவனத்தில் எடுக்காத ஒரு பூச்சிய வரைபு வெளிவந்திருக்கும் ஓர் அரசியல் சூழலில் அதைக் குறித்து அக்கட்சி கருத்து எதையும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் தெரிவிக்கவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் இது குறித்து தமது கட்சி விரைவில் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் ஏற்கனவே விக்னேஸ்வரன் தனது நிலைப்பாட்டை தெரிவித்துவிட்டார். கஜேந்திரகுமார் தனது நிலைப்பாட்டை அண்மையில் தெரிவித்திருக்கிறார். அதுதொடர்பாக அவர் வழங்கிய ஒரு நேர்காணலில் பூச்சிய வரைபுக்கு எதிராக மூன்று கட்சிகளையும் இணைப்பதற்கு தமிழ் சிவில் சமூக அமையம் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.


முன்னைய கடிதத்தின் தொடர்ச்சியாக பூச்சிய வரைபு குறித்த தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைப்பதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கடந்த கிழமை முழுவதும் முயற்சித்தார்கள்.கூட்டமைப்பு இதுவிடயத்தில் தொடக்கத்திலிருந்து பின்னடித்தது.எனவே ஏனைய இரண்டு கட்சிகளையும் ஒரு பொது உடன்படிக்கைக்கு கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. எனினும் அப்பொதுவரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் அந்த இரண்டு கட்சிகளையும் உடன்படவைக்க முடியவில்லை. இதுவிடயத்தில் இரண்டு தரப்பையும் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வைப்பதற்கு சிவில் சமூகத்தவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் அது வெற்றி பெறவில்லை.எனவே அரசியல் கட்சித் தலைவர்களுடைய கையெழுத்துக்கள் இன்றி ஒரு அறிக்கையை தமிழ் சிவில் சமூக அமையம் தனது பெயரில் வெளியிட்டது. அந்த ஆவணம் வெளியிடப்பட்டபின் கஜேந்திரகுமார் தன்னுடைய கட்சியின் அறிக்கையை வெளியிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் ஜெனிவாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைத்த மூன்று கட்சிகளும் அதன்பின் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான மக்கள் பேரணியில் ஒன்றாக பங்குபற்றிய மூன்று கட்சிகளும் பூச்சியவரைபு தொடர்பில் ஒரு பொது உடன்படிக்கைக்கு வரமுடியவில்லை.இது ஒரு பின்னடைவே. தமிழ்க் கட்சிகளை கொள்கை அடிப்படையில் ஒன்றாகத் திரட்டுவது இப்போதைக்கு அம்புலிமாமாக் கதையே.குறைந்தபட்சம் விடயங்களை மையமாகக்கொண்டு தற்காலிகக் கூட்டுக்களையாவது உருவாக்கலாமா? என்று சிவில்சமூகப் பிரதிநிதிகள் பாடுபட்டார்கள். அவ்வாறு உழைத்ததன் விளைவே ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு பொதுக்கோரிக்கை ஆகும். அது கடந்த பத்தாண்டுகளில் எட்டப்பட்ட ஒரு முக்கிய அடைவும் ஆகும்.ராஜதந்திர வட்டாரங்களிலும் ஐநா.வட்டாரங்களிலும் அந்தக் கடிதம் உற்றுக் கவனிக்கப்பட்டது. ஆனால் அந்த வெற்றியை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்ல முடியவில்லை என்பதைத்தான் பூச்சிய வரைபு தொடர்பான தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடு வெளிப்படுத்தியிருக்கிறதா ?

நிலாந்தன்



# பிராந்தியச் செய்திகள்



## நாமலின் சிந்தனை – சம்மாந்துறையில் ‘சைக்கிள் ஓட்டுதல் ஞாயிறு’ நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம் !

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவில் உருவான 'சைக்கிள் ஓட்டுதல் ஞாயிறு' நிகழ்ச்சித்திட்டம் சம்மாந்துறை மு.போ விளையாட்டு கழத்தின் தலைவர் கே.எல்.எம் ஷக்கி தலைமையில் இன்று (7) சம்மாந்துறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சம்மாந்துறை சிறுவர் பூங்காவிலிருந்து காலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் உடல் ஆரோக்கியம் மேலோங்கும் என்பதுடன் சூழலுக்கும் பாதிப்புகள் ஏற்படாது என்று இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சைக்கிள் ஓட்டிகள் தெரிவித்தனர். மேலும் எமக்கான பிரத்தியோக ஏற்பாடுகளை வீதிகளில் செய்து தந்தால் இதனை தினமும் செய்வதில் எங்களுக்கு எவ்வித தடையும் இருக்காது என்று தெரிவித்தனர்.







## செழிப்பான உற்பத்தி கிராமங்களை ஆரம்பிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு

அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அவர்களது நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக சமுர்த்தி, வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் செழிப்பான வாரத்தினையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்திற்கான 'செழிப்பான உற்பத்தி கிராமங்களை ஆரம்பிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று (06) சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது தலைமையில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.தட்சணகௌறி டினேஸ் அவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கலந்துகொண்டிருந்தார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக பட்டிப்பளை பிரதேச சபையின் தவிசாளர் என்.புஸ்பலிங்கம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் எஸ்.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கடுக்காமுனை கிராம பொதுமக்களது பிரசன்னத்துடன் பனைசார் பொருட்கள் உற்பத்தி கிராம ஆரம்ப நிகழ்வானது மிகவும் கோலா கலமாக அதிதிகளினால் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது. பனைசார் உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கான வசதியினை கொண்ட கட்டடத்திற்கான கடிக்கல் நடப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அதிதிகளின் உரையினைத்தொடர்ந்து, பனைசார் தொழில் முயற்சியாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் குறைகளை அதிதிகள் செவிமடுத்ததுடன் அவற்றை எவ்வாறு எதிர்காலத்தில் நிவர்த்திப்பது மற்றும் குறைகளை நிவர்த்திப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் தமது கருத்துக்களையும் தெரிவித்திருந்தார்.

இதன்போது பிரதேசத்தைச் சேர்ந்த பனைசார் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றினை அதிதிகள் பார்வையிட்டதுடன், கொள்வனவில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஜனாசாக்கள் நல்லடக்கம் ஓட்டமாவடியில் தொடர்கின்றது

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களில் கடந்த இரண்டு நாட்களில் இருபது ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மூன்றாவது நாளாகவும் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றது. ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சிபார்சு வழங்கப்பட்டுள்ள நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அடக்கம் செய்யப்பட்டு வரும் நிலையில் கடந்த இரு தினங்களில் கொரோனாவினால் மரணித்தவர்களின் இருபது (20) ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இன்று மூன்றாவது நாளாகவும் அடக்கம் செய்யப்படும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.



கொரோனா தொற்று மூலம் மரணித்த ஜனாஸாக்களில் கடந்த வெள்ளிக்கிழமை ஒன்பது ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதுடன் சனிக்கிழமை பதினொரு ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை இன்று மதியம் 03 மணிவரை நான்கு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டு ஆண்களதும் இரண்டு பெண்களது ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் பம்பரபண்ண பதுளை தெனியாயரக்வான, தெஹிவளை கொலன்னாவ பகுதிகளை சேர்ந்தவர்களின் ஜனாஸாக்களே இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் வரை ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொரோனா தொற்றால் மரணிக்கும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதற்கமைய மூன்று தினங்களில் இருபத்திநாலு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## ஏழு வாரங்களேயான பச்சிளங் குழந்தை கொரோனா தொற்றினால் உயிரிழப்பு!

பிறந்து ஏழு வாரங்களேயான பச்சிளங் குழந்தையொன்றுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொரளை சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் ஜி.விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.




நுரையீரலில் ஏற்பட்ட நோய்நிலைமை காரணமாக வெலிமடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த குழந்தைக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், பின்னர் பொரளை சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

இதேவேளை, குறித்த குழந்தையின் தாய்க்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளதாக பொரளை சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில் மேலும் 176 பேருக்கு கொரோனா தொற்று கண்டறிவு!

நாட்டில் மேலும் 176 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்படி, இலங்கையில் இதுவரையான மொத்த கொரோனா பாதிப்பு 85 ஆயிரத்து 512 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 290 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 82 ஆயிரத்து 59ஆகப் பதிவாகியுள்ளது. அவர்களில், இன்னும் இரண்டாயிரத்து 956 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை, நாட்டில் இதுவரை 497 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






## விஜய்யின் 65வது படத்தில் கமிட்டாகியிருக்கும் நடிகைக்கு இத்தனை கோடி சம்பளமா?

விஜய்யின் 64வது படம் மாஸ்டர் வெளியாகி இன்றோடு 50வது நாள் ஆகிவிட்டது. படக்குழுவினர் மற்றும் ரசிகர்கள் இந்த நாளை கொண்டாடி வருகிறார்கள்.

தயாரிப்பு நிறுவனமும் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட ஸ்பெஷல் வீடியோவை வெளியிட்டுள்ளார்கள். இந்த நேரத்தில் தான் தளபதி 65 பட பேச்சும் போய்க் கொண்டிருக்கிறது.

சன் பிக்சர்ஸ் தயாரிக்க, நெல்சன் இயக்க, அனிருத் இசையமைக்க படம் தயாராகிறது.

கடந்த சில நாட்களாக விஜய்யின் 65வது படத்தில் நாயகி பூஜா ஹெட்ச் கமிட்டாகி இருப்பதாக கூறப்பட்டு வந்த நிலையில் அவருக்கு ரூ. 3.5 கோடி சம்பளம் பேசப்பட்டு இருப்பதாக தகவல்கள் வலம் வருகிறது.




## வடசென்னை 2 எப்போது உருவாகும்? – வெற்றிமாறன் விளக்கம்


இயக்குனர் வெற்றிமாறன், தற்போது சூரியை வைத்து ஒரு படத்தை இயக்கி வருகிறார். இதையடுத்து சூர்யா நடிக்கும் வாடிவாசல் படத்தை இயக்க உள்ளார்.

தனுஷ்-வெற்றிமாறன் கூட்டணி, தமிழ் சினிமாவின் பிளாக்பஸ்டர் கூட்டணியாக விளங்கி வருகிறது. இவர்கள் கூட்டணியில் வெளியான பொல்லாதவன், ஆடுகளம், வடசென்னை, அசுரன் என அனைத்துமே மாஸ்டர் பீஸ் தான்.

கடந்த 2018-ம் ஆண்டு இவர்கள் கூட்டணியில் வெளியாகி வெற்றிபெற்ற படம் வடசென்னை. இப்படத்தின் 2-ம் பாகம் உருவாகும் எனவும் அப்போது அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு வெளியாகி மூன்று வருடங்கள் ஆகியும், அப்படம் குறித்த அடுத்தக்கட்ட தகவல் எதுவும் வெளியாகவில்லை. இதனால் வடசென்னை 2 உருவாகிறதா?, இல்லையா? என்கிற குழப்ப நிலை நீடித்து வந்தது.

இந்நிலையில், சமீபத்தில் ஒரு விழாவில் கலந்துகொண்டு பேசிய வெற்றிமாறன், வடசென்னை 2-ம் பாகம் இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து உருவாக வாய்ப்புள்ளதாக கூறினார். மேலும் முதல் பாகத்தை விட இரண்டாம் பாகம் பிரமாண்டமாக உருவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இயக்குனர் வெற்றிமாறன் தற்போது சூரியைவைத்து ஒருபடத்தை இயக்கிவருகிறார். இதையடுத்து சூர்யா நடிக்கும் வாடிவாசல் படத்தை இயக்க உள்ளார். இந்த இரண்டு படங்களையும் முடித்த பிறகே தனுஷின் வடசென்னை-2 படத்தை இயக்குவார் என தெரிகிறது.



## பட வாய்ப்பு இல்லாததால் ஹன்சிகா எடுத்த அதிரடி முடிவு



ஒரு காலத்தில் பிசியாக நடித்துக் கொண்டிருந்த ஹன்சிகாவுக்கு தற்போது பட வாய்ப்புகள் இல்லாததால், அவர் அதிரடி முடிவு ஒன்றை எடுத்துள்ளாராம்.

தமிழ் திரையுலகில் அறிமுகமான குறுகிய காலத்திலேயே, விஜய், சூர்யா, தனுஷ், சிம்பு போன்ற உச்ச நடிகர்களுக்கு ஜோடியாக நடித்து முன்னணி ஹீரோயினாக வலம் வந்தவர் ஹன்சிகா.

தற்போது அவர் கைவசம் ஹமஹா' என்கிற படம் மட்டும் உள்ளது. இது அவரது 50-வது படம். இப்படத்தில் சிம்பு கவுரவ வேடத்தில் நடித்திருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து ரிலீசுக்கு தயாராகி வருகிறது. இதையடுத்து அவருக்கு பெரிதாக பட வாய்ப்பு இல்லை.

இதனால் அவர் ஆல்பம் பாடல்களில் நடித்து அதனை தனது யூடியூப் சேனலில் பதிவேற்றி வருகிறார். இவர் நடித்த பூட்டி ஷேக், மாஸா போன்ற ஆல்பம் பாடல்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. பட வாய்ப்பு இல்லாததால் தொடர்ந்து இசை ஆல்பங்களில் நடிக்க ஹன்சிகா திட்டமிட்டு உள்ளாராம்.

## 'திரிஷ்யம் 2' ரீமேக்கில் ராணா?



ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மலையாளத்தில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்ற 'திரிஷ்யம்-2 ' படத்தை பிற மொழிகளிலும் ரீமேக் செய்ய உள்ளனர்.

மலையாள சூப்பர் ஹிட் திரைப்படமான 'திரிஷ்யம்'-ன் இரண்டாம் பாகமான 'திரிஷ்யம்-2 ' கடந்த மாதம் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது. இப்படத்தை பிற மொழிகளில் ரீமேக் செய்ய உள்ளனர். அதன்படி திரிஷ்யம் 2 தெலுங்கு ரீமேக் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு அண்மையில் வெளியானது.

'திரிஷ்யம்' முதல் பாகத்தை தெலுங்கில் ரீமேக் செய்த அதே குழு, இரண்டாம் பாகத்தின் ரீமேக்கிற்கும் தயாராகிறது. ஜீத்து ஜோசப் இயக்கத்தில், வெங்கடேஷ், மீனா, நதியா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

மலையாளத்தில் திரிஷ்யம் இரண்டாம் பாகத்தில் ஜஜி கதாபாத்திரம் ஒன்று புதிதாக சேர்க்கப்பட்டிருந்தது. அதில் நடிகர் முரளிகோபி நடித்திருந்தார்.

இந்நிலையில், தெலுங்கில் அந்த கதாபாத்திரத்தில் நடிகர் ராணாவை நடிக்க வைக்க படக்குழு முடிவு செய்துள்ளார்களாம். வெங்கடேசும் ராணாவும் நெருங்கிய உறவினர்கள் என்பதால், இப்படத்தில் நடிக்க ராணா ஒப்புக்கொள்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

**தொகுப்பு :– ஹாசினி**




### முகச்சுருக்கம் நீங்கி முகம் பளபளவாக

தினமும் பாலில் தேவையான அளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் எந்த நோய்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடல் பெற்று விடும். முகம் அழகாகவும், உடல் பளபளப்பாகவும் இருக்கும்.

அதிகாலையில் வெறும் வயிற்றில் அத்திப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடல் அழகும், இளமையும் நாளுக்கு நாள் அதிகமாகும் என்று பழங்கால அரேபிய மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

முகச் சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணையில் மஞ்சத்தூளை போட்டுக் குலைத்து உடம்பிற்கு தடவி. பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும். மிருதுவாகவும் இருக்கும்.

தினமும் முகத்தில் ஆலிவ் எண்ணெய் பூசி வர முகச்சுருக்கம் நீங்கி பளபளப்பாக இருக்கும்.

ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும்.

பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

### முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

## ஆரோக்கியம் தரும் முருங்கைக் கீரையின் பயன்கள்...!

முருங்கைக் கீரையில் வைட்டமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கால்சியம், மெக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன. முருங்கை இலையினுடைய பொடியானது மூளையின் ஆரோக்கியத்துக்கு மிகப் பெரிய அளவில் உதவுகின்றது. இது அல்சைமர் நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இதில் உள்ள வைட்டமின் இ மற்றும் வைட்டமின் சி ஆகியவை மன வளம், நியாபக சக்தி ஆகியவற்றைப் பாதுகாக்க உதவுகிறது

ஆஸ்துமா, மார்சளி, சைனஸ் போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கை இலை ரசம் அல்லது சூப் மிகவும் நல்ல பலன் தரும். முருங்கை இலையினுடைய பொடியானது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றது. இது மிக முக்கியமாக ரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுகின்றது.



முருங்கை இலை சாறு இரத்தசுத்தி செய்வதுடன், எலும்புகளையும் வலுப்படுத்தும். கர்ப்பப்பையை வலுப்படுத்தும். தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும். முருங்கை இலைச்சாறுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவ முகப்பருக்கள் மறையும்.

முருங்கை இலையினுடைய பொடியானது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றது. இது மிக முக்கியமாக ரத்தத்தில் உள்ள கொழுப்புகளைக் குறைக்க உதவுகின்றது.

முருங்கை இலையில் உள்ள பாக்டீரியா மற்றும் பூஞ்சை எதிர்ப்பு சக்தியானது, உங்களுடைய சருமத்தில் உண்டாகின்ற தொற்றுக்கள், பாக்டீரியாவினால் உண்டாகும் பிரச்சினைகள் போன்றவற்றில் இருந்து உங்களைக் காப்பாற்ற உதவுகிறது. இது சிறுநீர்ப் பாதையில் ஏற்படுகின்ற தொற்றுக்களைப் போக்கவும் உதவுகிறது.

முருங்கை கீரையை அடிக்கடி பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் பித்த மயக்கம், மலச்சிக்கல், கண்நோய் கபம், மந்தம் போன்றவை குணமாகும். உடல் சூடு அதிகம் உள்ளவர்கள் வாரத்தில் இரண்டு முறை முருங்கைகீரை சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.

## சுவையான சோன்பப்டி

சுவையான சோன் பப்டியை, வீட்டிலேயே ஈஸியாக செய்து சாப்பிடலாம்.

**தேவையான பொருட்கள்:-** கடலை மாவு - 1 1/2 கப், மைதா -1 1/2 கப், பால் - 2 டேபிள் ஸ்பூன், சர்க்கரை - 2 1/2 கப், ஏலக்காய் பவுடர் - 1 டீஸ்பூன், தண்ணீர் - 1 1/2 கப், பாலிதீன் ஷீட் - 1, நெய் - 250 கிராம்.



**செய்முறை:-** ஒரு பௌலில் கடலை மாவு மற்றும் மைதா மாவை நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் நெய்யை ஊற்றி நன்கு சூடானதும், மெதுவாக அந்த மாவை போட்டு, லேசாக பொன்னிறத்தில் வரும் போது இறக்கி விடவும். பின் அதனை குளிர வைக்க வேண்டும்.

அதே சமயம், ஒரு வாணலியில் தண்ணீரை ஊற்றி, சர்க்கரை மற்றும் பாலை ஊற்றி, சற்று கெட்டியாகும் வரை நன்கு கொதிக்க விடவும். அந்த பாகு கெட்டியானதும் இறக்கி, அதனையும் குளிர வைக்க வேண்டும்.

பின் ஒரு தட்டை எடுத்துக் கொண்டு, அதில் நெய்யை தடவி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு குளிர வைத்துள்ள மாவை, சர்க்கரை பாகுவுடன் கரண்டியை வைத்து கிளற வேண்டும். அவ்வாறு கிளறும் போது நீளநீளமாக மாவானது சுருளும். அதுவும் குறைந்தது 1 இன்ச் நீளத்தில் இருக்குமாறு கிளற வேண்டும்.

பின் அதனை அந்த தட்டில் ஊற்றி, அதன் மேல் ஏலக்காய் பவுடரைத் தூவி, குளிர வைக்க வேண்டும். பின்னர் அதனை சதுர வடிவத் துண்டுகளாக்கி, பாலிதீன் ஷீட்டில் வைத்து, அதன் மேல் பாதாம் மற்றும் பிஸ்தாவை வைத்து அலங்கரித்து, சுற்றி வைக்க வேண்டும். சூப்பரான சோன் பப்டி ரெடி

காதலித்து பார்ப்பதை விட
காதலை தள்ளி நின்று பாருங்கள்
அதன் அழகு என்ன வென்று புரியும்
காலத்தால் அழிக்க முடியாத காவியங்களை காதல்
ஒன்றால் மட்டுமே கொடுக்க முடியும்....
இன்று காதலிப்பவர்கள் பல கனவுகளை சுமந்து
வாழ்ந்து கொண்டிருக்கினர்...
அன்று காதலித்தவர்கள் பல நினைவுகளை சுமந்து
வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்...



**தொகுப்பு :- ஹாசினி**

# பெண்மையை போற்றும் சர்வதேச மகளிர் தினம்



இன்று உலக மகளிர் தினம் (Inter national Women's Day). ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதி அன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை நாளாகும்.

சர்வதேச மகளிர் தினம் இன்று உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிட வேண்டும். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். வீட்டு வேலைகளை செய்வதற்காக பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்ப கல்வி கூட தரப்படாமல் மறுக்கப்பட்டது.

1857ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது. ஆண்களுக்கு நிகராகபணியாற்றவாய்ப்புகிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இதனால் பெண்கள் மிகுந்த வருத்தமடைந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு இதற்கு செவி கொடுக்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் பெண் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். 1857ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி இதற்கான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். அதன் பிறகு 1907ம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910ம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு அவர்கள் காட்டினர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜெர்மனி கம்யூனிஸ்ட் தலைவர் கிளாரே செர்கினே, மார்ச் 8ம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

1920ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8ம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

இதையடுத்து 1921ம் ஆண்டு முதல் மார்ச் 8ம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975ம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது.

தற்போது ரஷ்யா, உக்ரைன், உஸ்பெஸ்கிஸ்தான், வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், பெலாரஸ், புர்கினியா பெசோ, கம்போடியா, கியூபா, எரித்திரியா, கஜகஸ்தான், மால்டோவா, மங்கோலியா, மான்டேநெக்ரோ, தஜிகிஸ்தான், துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான மகளிர் தின கருப்பொருளாக ஐ.நா முன்மொழிந்திருக்கும் நோக்கம், **"பெண்களுக்கு எதிரான வன்முறையை தக்க நேரத்தில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று வாக்குறுதி கொள்வோம்"** என்பதே.

## பெண்களுக்கு கொண்டாட ஏது தினம்

கருவிலே தொடங்கும் உரிமைக் குரல்
காலமுழுதும் போராடும் பீனிக்ஸ் பறவை
சுவரில் அறையப்பட்ட துருப்பிடிக்க ஆணியாய்
குடும்ப சிலுவையைச் சுமக்கும் சுமைதாங்கியாய்
உருண்டு விழும் தாயமாய்ப் புரள்கிறாள்
உரசிப் பார்க்கும் தங்கமாய் உருகுகிறாள்
மகளாய் மனைவியாய் அன்னையாய் சகோதரியாய்
மாறி மாறி போடப்படும் முகமூடி
சுயத்தைக் தொலைத்து முகம்தேடும் தேவதை
சுயநலம் சிறிதும் இல்லாத இல்லாள்
முப்பத்துமூன்று சதவிகித ஒதுக்கீட்டைப் புறந்தள்ளி
சமையலறை கோட்டைக்கு முடிசூடா ராணியாகி
அடுத்தவர் பசிதீர்க்க அடுக்களையில் பணியாற்றி
அலுக்காத உழைப்பில் சலிக்காத பெண்ணரசி
மூன்றுநாள் இயற்கை தரும் கொடுமை
மூன்று முடிச்சில் முடங்கிடும் இளமை
இலட்சியங்கள் தகர்ந்திடும் பிள்ளை வளர்ப்பில்
இலக்குகள் கனவாக அவள் வாழ்வில்
இறக்கும்வரை உறவுகளுக்காய் உழைத்து வாழும்
பெண்களுக்கு கொண்டாட ஏது தினம்.

## தன்னம்பிக்கை பொன்மொழிகள்

தன் வாழ்க்கைக்கு தேவையான முடிவை தானே சுயமாக முடிவெடுக்க தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.

தன்னம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்து விடும் பூவாக இருக்க கூடாது
ஒவ்வொரு நாளும் பூக்கும் செடியாக இருக்க வேண்டும்.

சிறந்த குறிக்கோளை அடைவதற்காக மனிதனால் செய்யப்படும் முயற்சியே
பிற்காலத்தில் மற்றவர்களால் படிக்கப்படும் வரலாறாக மாறுகிறது.

எல்லோரையும் அதிகம் நம்புங்கள் துரோகம் பழகிடும்..
யாரையும் தங்கி வாழாதீர்கள் தன்னம்பிக்கை தானாக வந்திடும்.

தவறு செய்யும் மனிதர்களை தவறாக பேசாதீர்கள்
ஏனென்றால் உங்கள் வாழ்க்கை இன்னும் முடியவில்லை.

வெற்றி எனும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம் தான்
தன்னம்பிக்கை அதை எப்போதும் வளர்த்துக் கொள்.

தன்னம்பிக்கை எனும் ஆயுதம் மட்டும் நம்மிடம் இருந்து விட்டால் முடிக்க முடியாத விடயம் என்று எதுவும் இந்த உலகில் இருக்காது.

தன்னம்பிக்கை இல்லாதவன் வெற்றி பெறுவது கடினம்..
அசைக்க முடியாத தன்னம்பிக்கை கொண்டவன் வீழ்வது அரிது.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள உங்கள் உதடுகளில் எப்போதும் புன்னகையை வைத்திருங்கள் அது தருகின்ற தன்னம்பிக்கை வேறு எங்கும் கிடைக்காது.

ஒவ்வொரு முறையும் தன்னம்பிக்கை வெற்றியை தேடித் தராது
ஆனால் வெற்றிக்கான படிக்கட்டை உருவாக்கி தரும்.

என்றும் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்..
மனிதனாக பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது.

முடியாத விடயங்கள் குறித்து கனவு காண்பவர்களே
அவற்றை வெற்றி கொள்ள முடியும்.

சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கின்றான்.
சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கின்றான்.

பலம் கொண்ட உடலை விட தன்னம்பிக்கை
கொண்ட மனமே சிறந்தது.

நீங்கள் ஆசைப்படுவது உங்களுக்கு கிடைக்காமல் போகலாம் ஆனால்
உங்களுக்கு தகுதியானது உங்களுக்கு நிச்சயம் கிடைத்தே தீரும்.

அரிய சாதனைகள் எல்லாம் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல..
தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் செய்யப்பட்டவை.

நம்முடன் வாழ்வோரை புரிந்து கொள்வதற்கு
நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

# அழைப்பு – யார் அவள் ?

அன்றைய இரவின் நிசப்தம் மயான அமைதிக்குள்ளாய் நித்திரையை குழப்பும் தொலைபேசி ஓசை தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்க நித்திரை குழும்பாத கண்களுடன் போனை பார்த்தேன்.

புதிதாய் ஓர் இலக்கத்தில் இருந்து அழைப்பு ஒன்று வந்தவண்ணமாய் இருந்தது பெரிதாய் அலட்டிக்கொள்ளாமல் வேலைக்களைப்பில் வந்து தூங்கியவன் போனை ஆஃப்(Off) செய்து விட்டு...

நிசப்த இரவின் ஈசல்களின் உல்லாச ரீங்காரத்தில் பாஞ்சாலி துயில் உரிய பாத்திருந்த பாண்டவர் போலானதோர் நித்திரை எனை ஆட்கொள்ள அப்படியே நித்திரையாகிப்போனேன் .

துயிலா!!! சாமக்கோழியின் கொக்கரிப்போடே நித்திரையில் இருந்து எழுந்து போனை பார்த்தபோது அதே அழைப்பு மீண்டுமாய் வந்திருந்தது தவறவிடப்பட்ட அழைப்புக்கள்! 666 என காட்டியது. அதே இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்ளவே எந்த பதிலும் அற்று அழைப்பு துண்டிக்கப்பட ...

ஆஃப்(Off) செய்த போன் எப்படி ஆன் (ON) ஆனது ஒன்றுமாய் புரியாமல் நான்தான் நித்திரை மயக்கத்தில் ஒழுங்காக ழுகக செய்யவில்லையோ என்று மறு படியும் போனை ஆஃப்(off) செய்து விட்டு நித்திரையாகிவிட்டேன் ...

நேரம் 6 மணி இருக்கும் வேலைக்கு தயாராகி போனை ஆன்(on) செய்ய மீண்டும் அதே அழைப்பு வர என்னடா இது எண்டவாறே போனை எடுத்து

ஹலோ என்றான்

ஹலோ எழிலா நான் ஹர்னி உங்கட எழுத்துக்களுக்கு நான் பெரிய இரசிகை உங்களோட எப்படியாச்சும் கதைச்சிரனும் எண்டுற ஆசை இண்டைக்குத்தான் நிறைவேறிச்சு என்றவள் வார்தைகள்...

பின் மாலை பனிபடர் பொழுதுகளில் கூடு துரும்பும் குயிலின் பாடல்போல் அவள் பேசிய வார்த்தைகளுக்குள்ளாய் சென்றுவிடமுடியாமல்ஏதோஒன்றுஎன்னை ஆட் கொள்ளவே... அந்த கந்தர்வக்குரலின் ஈர்ப்பு மறுபுறமாய் அச்சத்தையும் கட்டவிழ்த்தே விட்டிருந்தது... தொடர் உரையாடல்கள் எங்களுக்குள்ளாய் நெருக்கத்தை ஏற்படுத்தி நாட்களும் கடந்தோட எனது எழுத்துக்களிலும் அவை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை நான் உணரத்தொடங்கியபோது நடுக்கம் தொற்றிக்கொண்டது என்னை சூழ எதோ ஒன்று விநோதமாய் நடப்பதாய் உணர்ந்தேன்...

அவளோடான உரையாடல்களின் போது மாய கட்டுக்குள்ளாய் அகப்பட்டு அவள் சிந்தனைகள் என் பேனையின் கிறுக்கல்களானதாய் என் எழுத்துக்களே என்னிடம் எடுத்தியப்பிக்கொண்டிருந்தன...

சில நேரங்கள் காதல் காவியம் ஒன்றை படைக்க ஆரம்பித்து ஈற்றில் அது நர பலியில் முடியும் எட்டுத்திக்கும் பிரபஞ்சம் போல் பரவிக்கிடந்த என் உணர்வுகள் ஒரே கொட்டில் குரூரங்களோட வாழப் பழகின ...

இவை எதனால் அவளோடான உரையாடல்கள் தொடர்ந்த நாட்களில் எல்லாம் இப்படியே அரங்கேற எழுத்தாளனாயிற்றேசுவாரஸ்யங்களையும் கதைகளையும் தேடி ஓடியே பழகியவன் அவளையும் தேடி ஓட எத்தனித்து அவளை அருகில் இருக்கும் கோயில் ஒன்றிற்கு வருமாறு கேட்ட கனமே மறுப்பு காரணமாய் இறை நம்பிக்கை இல்லை வேறு எதுவும் கேட்காதே என்றால் நானும் சும்மா இல்ல கோயிலில் சந்திக்கும் முடிவும் எனது பயத்தின் வெளிப்பாடே .

இமைப்பொழுதும் வீணாக்காமல் வந்த அவளின் மறுப்பு என் சந்தேகத்திற்கு வழுச்சேர்க்கவே வறட்டு தைரியத்தை வரவைத்தவனாய் அவளை நாளை வீட்டிற்கு வா என்றேன் சம்மதித்தாள் .

ஆமாம் அவளிடம் நான் படம் கேட்டதாய் நினைவில்லை ஆம் அவள் உருவத்தைக்கூட பார்க்காமலா? இத்தனை நாட்களாய் எனை ஆட் கொள்ள விட்டிருந்தேன் அவளுக்கு உருவம் இருக்குமா!! இருந்தால் எப்படி இருக்கும் இலக்கியங்கள் வர்ணிக்கும் பயங்கரமோ!! இல்லை என்னை மயக்கி ஆட் கொள்ளும் கவர்ச்சியோ!!! இவ்வளவு முட்டாள நான் எதுவுமே அறியாமல் அவள் பிடியில் சிக்கும் அளவு என என்னை நானே கடிந்து கொண்டேன்... அன்றைய பொழுதும் கரைந்தோட அதிகாலைமுதல்பயம்கலந்த ஆர்வத்தோடு ஹர்னியின் வருகைக்காக காத்திருக்கவே நேரங்கள் விரைந்தோடின ஆனாலும் அவள் வருகைக்கான அறிகுறிகள் எவையும் தென்பட்டதா இல்லை

தெரு நாய்களின் ஆர்ப்பாட்டக் கதறல்கள் இல்லை. காற்றின் வேகம் அதிகரித்ததாய் இல்லை. மல்லிகையும் மணக்கவில்லை ...

அவள் வரப்போவதில்லை இந்தக் காலைப்பொழுதுகள் அவற்றிற்கான நேரம் இல்லையே எப்படி வருவாள் அவள் சுட்டெரிக்கும் சூரியன் அவள் முதல் விரோதியாகிற்றே என எனக்குள்ளாய் எண்ணிக்கொண்டுருந்த கனம் யாரோ கதவை தட்டும் சத்தம் 'பட பட பட பட' என கேட்க கதவு தட்டும் சத்தத்தின் மெட்டிற்கு ஏற்றால்போல் எனது இதயமும் படபடக்க காத்துவாங்கவே கதவருகில் செல்லும் துணிவோ தைரியமோ இல்லாமல் யார் இது என்று கேட்டேன் என் கேள்விக்கான பதிலாய் சில நொடி மௌனத்தோட

மீண்டுப் படபடக்க துவங்கியது கதவும் இருதயமும் இன்னும் வேகமாய் அடித்துக்கொள்ளநேற்றிரவுவாசித்தநாவல் ஒன்றின் வரிகள் நினைவைத்தட்டின

'பேய்கள் மூன்று தடவைகளுக்கு மேல் அழைப்பதில்லை' என்பதாய் அமைந்திருந்தது அந்த வரிகள்

நானும் பொறுத்திருந்து பார்த்தேன் கதவின் சத்தம் அடங்கி மூன்றாம் முறையும் படபடத்தது இன்னும் ஒரு முறை தட்டப்பட்டால் திறப்பது என்ற முடிவோடு கதவையே வெறிக்கப்பார்த்திருந்தேன் மூன்றாவது முறை அடங்கிய படபடப்பு அடங்கிய படியே இருந்ததும் உச்சிமுதல் பாதம் வரையான உரோமங்கள் பயத்தின் அதியுச்ச வெளிப்பாடாய் சிலிர்த்து நிற்க

கதவருகில் சென்று யாரது என்றேன் பதில் இல்லை பயத்தை மனதின் ஆழத்திற்குள்ளாய் புதைத்துவிட்டபடியே கதவை திறந்து பார்த்தேன் யாரும் இருப்பதாய் தெரியவில்லை ஆனாலும் யாரோ ஏதோ ஒன்று வந்துவிட்டுத்தான் போய் இருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாய் வீட்டு வாசலில் வெண்ணிற தூரிகையால் ஏதோ வினோத அடையாளங்கள் இடப்பட்டிருந்தது என்ன அடையாளம் இது ஒன்றுமாய் புரியாமல் இது என்னவாக இருக்கும் என்ற சந்தேகத்தை தீர்க்க அதை ஒரு படம் எடுத்து எனது நண்பனுக்கு அனுப்பினேன் அவன் அமானுஸ்யமான விஷயங்கள் தொடர்பான ஆய்வில் இருப்பவன் .

அதை பார்த்தவுடன் **இது ஒரு காப்பு மாந்திரீகச் சின்னம் இதைப்பற்றி நேரில் கதைப்பதாகவும் இதை வரைவந்தவர்கள் உன்னை எதனிடமோ இருந்து காக்க முற்படுகிறார்கள் நீ வீட்ட விட்டு வெளிய போகாம சற்று கவனமாக இருக்கும் படியும் கூறவே ஏற்கனவே மிதமிஞ்சிய பயத்தில் இருந்தவனுக்கு அடுத்த பேரிடியாகிப்போனது அவன் வார்த்தைகள்...**

எதனிடமிருந்து யார் எதற்காக என்னை பாதுகாக்கிறார்கள் ஒன்றும் புரியாமல் குழம்பிப்போயிருக்கவே ...

ஹர்னியின் அழைப்பு மீண்டும் வந்தது எழில் நீ இரண்டு திங்கள்கள் எந்த ஒரு காரணத்திற்காகவும் வீட்ட விட்டு வெளிய போகாத அவளால நான் போட்ட காப்பைத்தாண்டி உள்ள வரமுடியாது நீ உள்ள இருப்பது தான் உனக்கான பாதுகாப்பு என்றவள் வார்த்தைகள் முடிவதற்குள்ளாய் ...

பட பட பட கதவு தட்டப்பட்டது

டேய் வெளிய வாடா என்ன இது வாசல்ல இது வந்து அழி எனது மனைவியின்குரல் கேட்க அழைப்பில் இருந்த ஹர்னி வெளிய போகாதடா எந்த ஒரு காரணத்துக்காகவும் அந்த அடையாளத்த அழிக்காத

ஹர்னி அது என்ட மனைவிதான் கூப்பிடுறாள் என்றேன்

அது உனது மனைவிதான அப்ப அவள உள்ள வரச்சொல்லு என்றாள் ஹர்னியின் பேச்சில் ஏதோ ஒரு பதட்டம் என்னவென்று அறிய முடியாமல் இருக்கவே நானும் எனது மனைவி ரிசியாவை உள்ள வாடி கொஞ்சம் வேலையா நிக்கிறன் கதவு திறந்துதான் இருக்கு என்ற மறு நொடி உரத்த அதிகாரத் தொனியில் மீண்டும் மீண்டும் என்னை அந்த அடையாளத்தை அழி அழி என்றவள் உள்ள வருவதாய் தெரியவில்லை உரத்த அவள் குரல் வினோதமாய் என்னை பயமுறுத்தும் படியாய் மாறி அடங்கிப்போனதும் கதவு வழியே பார்த்தேன் வெளியில் நின்ற ரிசியாவை காணவில்லை பயம் கலந்த ஆச்சரியத்தோடு திகைத்து பிரம்மை பிடித்தவன் போலாகிப்போகவே ...

இனி அவள் வரமாட்டால் இத்தனை நாட்களாய் உனை ஆட் கொண்டதும் உனது மனைவியாய் வீட்டில் இருந்ததும் லூசிவ என்னும் கொடிய ஆவி ஆண்கள் மனதைமயக்கிசிந்தைனைகளுக்குள்ளாய் தன்னை மனைவியாய் எண்ணவைத்து இறுதியில் அவர்கள் ஆன்மாவை அழிக்கும் கொடிய ஆவி அவள் வசப்படும் அப்பாவிகளை எனது பரம்பரை காலம் காலமாய் காத்து வருகிறது எனது வேலை முடிந்தது என்று அழைப்பை துண்டித்தாள்.

இத்தனை காலம் ஒரு ஆவியுடான வாழ்ந்தேன் என்னும் பயமும் ஆச்சரியமும் ஒருசேர எனைச்சூழ்ந்து மூன்று திங்கள்கள் கடந்தது .

இரவு மீண்டும் ஹர்னியிடம் இருந்து அழைப்பு 'இனி லூசிவா வரமாட்டாள் எனது அழைப்பும் வராது... '



புவனேஸ்வரன் தர்சிகன்




## செவ்வாய் கிரகத்தில் இருப்பது போன்ற படங்களை எடுக்கலாம்: நாசா தரும் புதிய வசதி

அமெரிக்காவை தளமாகக் கொண்ட விண்வெளி ஆய்வு மையமான நாசா செவ்வாய் கிரகம் தொடர்பில் மும்முரமாக ஆராய்ச்சிகளை செய்து வருகின்றது.

அண்மையிலும் நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் அனுப்பப்பட்டு விண்வெளி ஓடம் ஒன்று செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியிருந்து.

இது பல கோணங்களில் படங்களை எடுத்து அனுப்பியிருந்தது.

நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டிருந்தது. இது மக்களுக்கு செவ்வாய் கிரகம் தொடர்பில் புதிய அனுபவத்தினை வழங்கியிருந்தது.

இந்நிலையில் மக்கள் செவ்வாய் கிரகத்தில் தாம் இருப்பது போன்ற புகைப்படத்தினை தாமே உருவாக்குவதற்கான வசதி ஒன்றினை நாசா அறிமுகம் செய்துள்ளது.

இது Photo Booth என அழைக்கப்படுகின்றது.

https://mars.nasa.gov/mars2020/participate/photo-booth/ எனும் இணைய முகவரிக்கு சென்று தமது புகைப்படத்தினை அப்லோட் செய்வதன் ஊடாக செவ்வாய் கிரகத்தில் இருப்பது போன்ற புகைப்படத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.




## வட்ஸ் அப்பில் அறிமுகமாகும் அட்டகாசமான வசதி

புதிய விதிமுறைகளை அறிமுகம் செய்யப்போவதாக அறிவித்திருந்த நிலையில் வட்ஸ் அப் செயலியினை பயன்படுத்துவதை பல பயனர்கள் தவிர்த்திருந்தனர்.

எனினும் எந்தவிதமான விதிமுறைகளையும் இதுவரை வட்ஸ் அப் மாற்றவில்லை.




இந்நிலையில் அன்ரோயிட் மற்றும் ஆப்பிள் சாதனங்களுக்கான அப்பிளிக்கேஷனில் புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி பயனர்களால் பரிமாறப்படும் புகைப்படங்கள் தானாக அழியக்கூடிய வசதியினை அறிமுகம் செய்யவுள்ளது.

இவ் வசதியானது Self-Destructing Photos என அழைக்கப்படுகின்றது.

இவ் வசதியானது பயனர்கள் மத்தியில் பலத்த வரவேற்பினைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று சில வாரங்களுக்கு முன்னர் குறுஞ்செய்திகள் தானாக அழியக்கூடிய வசதி அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்த வருடம் டுவிட்டரில் அறிமுகமாகவுள்ள 5 புதிய வசதிகள்

முன்னணி சமூகவலைத்தளங்களுள் ஒன்றான டுவிட்டரினை பல மில்லியன் வரையான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.



இத் தளத்தில் அவ்வப்போது புதிய வசதிகள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வரிசையில் 2021 ஆம் ஆண்டு 5 புதிய வசதிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவற்றில் Communities எனும் வசதியும் ஒன்றாகும்.

இவ் வசதியின் ஊடாக பயனர்கள் தாம் விரும்பிய தலைப்பு அல்லது இருக்கும் இடத்தினை அடிப்படையாகக் கொண்டு பயனர்களை ஒன்று சேர்க்க முடியும்.

அதேபோன்று Super Follows எனும் வசதியும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இதன் மூலம் பின்தொடருனர்கள் தாம் விரும்பியவர்களை மிகவும் பிரபலமானவர்களாக்குவதற்கு உதவ முடியும்.

இவற்றிற்கு அடுத்ததாக Safety Mode எனும் வசதியும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவ் வசதியினை ஆக்டிவேட் செய்திருப்பின் டுவிட்டரின் ஒழுங்குவிதிகளை மீறுபவர்களின் கணக்கு தானாகவே ப்ளொக் செய்யப்படும்.

இதேபோன்று நான்காவதாக Business Profiles எனும் வசதி அறிமுகம் செய்யப்படுகின்றது.

இதன் மூலம் வியாபாரத்திற்காக பயன்படுத்தப்படும் டுவிட்டர் கணக்குகளை தனித்துவமாக அடையாளம் காண முடியும்.

ஐந்தாவதாக Audio Spaces எனும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.


இதன் மூலம் பயனர்கள் தமது சட் ரூமினுள் ஆடியோக்களை மாத்திரம் பயன்படுத்த முடியும்.

## இன்ஸ்டகிராம் அறிமுகம் செய்த புது வசதி

இன்ஸ்டகிராம் செயலியில் நேரலை செய்ய புது வசதியினை தற்போது அறிமுகம் செய்து வைத்துள்ளது. இதுவரை இன்ஸ்டகிராமில் நேரலை ஸ்டிரீமிங்கில் ஒருவர் மட்டுமே இணைந்து கொள்ளும் வசதி வழங்கப்பட்டு இருந்தது.


தற்போது ஒரே சமயத்தில் நான்கு பேர் ஒன்றிணைந்து நேரலை ஸ்டிரீமிங் செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

இப்புதிய வசதியை இன்ஸ்டகிராம் லைவ் ரூம்ஸ் என அழைக்கிறது. இதுகுறித்து இன்ஸ்டாகிராம் தனது வலைதளத்தில் "நேரலையில் இதுபோன்ற அம்சம் புது வாய்ப்புகளை உருவாக்க வழி செய்யும். இதை கொண்டு விவாத நிகழ்ச்சி, மற்ற கலைஞர்களுடன் உரையாடல், பேட்டி அல்லது நண்பர்களுடன் இணைந்து உரையாட முடியும்." என தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




**உங்கள் வாழ்க்கையை வாழ இருப்பது இரண்டே வழிகள் தான். ஒன்று, உலகில் எதுவுமே அற்புதமானது இல்லை என்பது போல வாழ்வது. இன்னொன்று, ஒவ்வொன்றும் ஒரு அற்புதம் என்று ரசித்து வாழ்வது.**

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்,**
**அமெரிக்க இயற்பியலாளர்**



# விளையாட்டு செய்திகள்

## இந்தியா எதற்கு பயப்படுகிறது? இங்கிலாந்து அவ்ளோ பெரிய டீமா? அக்தர் கிண்டல்

இந்தியா. இங்கிலாந்து இடையான மூன்றாவது டெஸ்ட் போட்டி மோடேராவில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. மைதானம் ஸ்பின்னிற்கு அதிகளவில் சாதகமாக இருந்ததால் போட்டி 2 நாட்களில் நடந்து முடிந்தது. குறிப்பாக, இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியத் தரப்பில் ரவிச்சந்திரன் அஸ்வின். அக்ஷர் படேல் இருவர் மட்டும் பந்துவீசி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்கள். இதனால், நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 2-1 என முன்னிலை வகிக்கிறது

போட்டி இரண்டு நாட்களுக்குள் நடந்து முடிந்துவிட்டதால், மைதானத்தைப் பலர் குறைகூறி வருகிறார்கள். இரண்டு நாட்களில் டெஸ்ட் போட்டி நடைபெற்று முடியும் அளவிற்கு மைதானம் இருக்கிறது என்றால் அதன் தரம் எந்தளவிற்கு இருக்கிறது எனப் பாருங்கள் என இங்கிலாந்து அணி முன்னாள் வீரர்கள் மைக்கேல் வான் போன்றவர்கள் விமர்சித்து வருகின்றனர்.




இந்நிலையில் மைதானம் குறித்து பாகிஸ்தான் அணி முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷோயிப் அக்தரும் கருத்து தெரிவித்துள்ளார். "டெஸ்ட் கிரிக்கெட்டை இதுபோன்ற மைதானத்தில் நடத்த வேண்டுமா? யாரும் விரும்ப மாட்டார்கள். பந்து காரணங்கள் இல்லாமல் சுழன்றது. இதனால், போட்டியும் இரண்டு நாட்களில் நடத்து முடிந்துவிட்டது. இது டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு ஆரோக்கியமல்ல. உள்ளூர் மைதானங்களில் எதிரணி வெற்றிபெறுவது கடினம் என்ற கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்தியா 400 ரன்கள் அடித்து, இங்கிலாந்து 200 அடித்து தோல்வியடைந்திருந்தால் பிரச்சினை இல்லை. இந்தியாவே 145 ரன்கள்தான் அடித்திருந்தது என்பதுதான் இங்குப் பிரச்சினையே" என்றார்.

மேலும் பேசிய அக்தர். ஆஸ்திரேலியாவில் அவர்கள் வடிவமைத்த மைதானங்களில் இந்தியா வெற்றிபெற்றது. இந்நிலையில் இந்தியா ஏன் இப்படித் தரமற்ற முறையில், ஸ்பின்னிற்கு சாதகமான முறையில் மட்டும் மைதானத்தை வடிவமைக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய ஸ்பின்னர்கள் பந்துபோடவே நடுங்கனும்: விவியன் ரிச்சர்ட்ஸ் அறிவுரை! "இந்திய அணி வலிமை வாய்ந்த அணி. மைதானங்கள் சாதகமாக இல்லை என்றாலும் கூட இவர்களால் இங்கிலாந்தை எளிதில் வீழ்த்திவிட முடியும். இந்தியா பயப்படக் கூடாது. ஸ்பின்னிற்கு மட்டும் சாதகமாக மைதானத்தை ஏன் வடிவமைக்க வேண்டும்? ஆஸ்திரேலியாவில் அடிலைட், மெல்போர்ன் எல்லாம் இந்தியாவுக்கு சாதகமான மைதானங்களா? அங்கு எப்படி இந்தியா வெற்றிபெற்றது? இந்தியா வலிமையான அணி என்பதை உணர வேண்டும். அவர்களால் எப்பேர்ப்பட்ட இடங்களில் சிறப்பாக விளையாட முடியும்".

"நான்காவது டெஸ்ட் போட்டியின்போது இந்தியா தரமான முறையில் மைதானத்தை வடிவமைத்திருக்கும் என நம்புகிறேன். இந்தியா அளவிற்கு இங்கிலாந்து வலிமையான அணி கிடையாது. இதை உணர்ந்து இந்தியா செயல்பட வேண்டும்" என அக்தர் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் புதிய தலைவர்களாக எல்கர்– பவுமா நியமனம்!




மட்டுப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவராக டெம்பா பவுமா. நியமிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதேபோல டெஸ்ட் அணியின் தலைவராக டீன் எல்கர் நியமிக்கப்பட்டுள்ளார். எல்கர் முன்னதாக ஜூலை 2017இல் லோர்ட்ஸில் நடந்த ஒரு டெஸ்டிலும், 2019 ஜனவரியில் பாகிஸ்தானுக்கு எதிராக வாண்டரர்ஸில் நடந்த டெஸ்டிலும் தேசிய 19 வயதுக்குட்பட்ட அணியான தென்னாப்பிரிக்கா ஏ அணிக்கும் தலைமை தாங்கியுள்ளார். முன்னதாக டு பிளெஸிஸ் அணித்தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து கடந்த ஆண்டு பெப்ரவரியில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு முன்பு மட்டுப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவராக குயின்டன் டி கொக் பெயரிடப்பட்டார்.

இதன்பிறகு டிசம்பரில், 2020-21 சீசன் முடியும் வரை டெஸ்ட் அணியின் தலைவராக செயற்பட்டார். இதில் ஏழு போட்டிகளில் ஐந்தில் அணி தோல்வியை சந்தித்தது. இந்த நிலையில் அவர் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

## பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி–20 தொடரின் 2021ஆம் பதிப்பு ஒத்திவைப்பு!

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடர். உடன் அமுலுக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நடப்பு தொடரில் விளையாடிவரும் வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில். இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்பாட்டுக் குழு. அணி உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகத்திற்கு இடையிலான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்மான இத்தொடரில் இதுவரை ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஒத்திவைப்பை அறிவிக்கும் இந்த நேரத்தில் திட்டமிடப்பட்ட 34 போட்டிகளில் 14 போட்டிகள் மட்டுமே முடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில். 'உடனடி நடவடிக்கையாக. பங்கேற்பாளர்கள் அனைவரின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. பங்கேற்ற ஆறு அணிகளுக்கும் மீண்டும் பிசிஆர் சோதனைகள். தடுப்பூசிகள் மற்றும் தனிமைப்படுத்தும் வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட்: இந்தியா 10 விக்கெட்டுகளால் அபார வெற்றி!

கடந்த வருடம் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற LPL கிரிக்கெட் தொடரில். ஆட்டநிர்ணயத்தில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டதாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர் சச்சித்ர சேனநாயக்கவின் பிணை மனு கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதவான் நிராகரித்துள்ளார்.

சட்டத்தரணி நுவன் பெலிகஹவத்தவினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை கோரிக்கை. பூரணப்படுத்தப்படாமல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய மேலதிக நீதவான், பிணை கோரிக்கையை நிராகரித்ததுடன். அதனை முழுமைப்படுத்தி சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக விளையாட்டுத்துறையில் குற்றங்களைத் தடுக்கும் விசேட பிரிவு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.



# உலக செய்திகள்

## சவுதி அரம்கோ எண்ணெய் நிறுவனம் மீது ஹவுத்தி கிளார்ச்சியாளர்கள் ஏவுகணை வீசி தாக்குதல்!

சவுதி அரேபியாவின் செங்கடல் நகரமான ஜெட்டாவில் உள்ள சவுதி அரம்கோ எண்ணெய் நிறுவனம் மீது ஈரானின் ஆதரவுடன் இருக்கும் ஹவுத்தி கிளார்ச்சியாளர்கள் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக யேமன் ஆயுதப்படைகளின் பிரிகேடியர் ஜெனரல் யஹ்யா சேரி தெரிவித்துள்ளார்.

அன்று (வியாழக்கிழமை) காலை, யேமன் ஏவுகணை பிரிவு சவுதி அராம்கோவை 'குட்ஸ்-2' ஏவுகணை மூலம் குறிவைத்தது. இந்த தாக்குதல் வெற்றியடைந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு டுவீட்டில் ஏவுகணை மிகத் துல்லியத்துடன் இலக்கைத் தாக்கியுள்ளது என்றும், அன்பான யேமன் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான முற்றுகை மற்றும் ஆக்கிரமிப்புக்கு இயற்கையான மற்றும் சட்டபூர்வமான பதிலின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் சேரி பதிவிட்டுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு சவுதி அரேபியாவிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. தெற்கு சவுதி அரேபியாவில் உள்ள கிங் காலித்தின் தளத்தின் மீது யேமன் படைகள் ட்ரோன் தாக்குதலை நடத்தியதாகவும் வியாழக்கிழமை காலை யேமன் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அராம்கோ, அதன் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிற்சாலைகள் பெரும்பாலும் சவுதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்தில், ஜெட்டாவிலிருந்து 1,000 கி.மீ (620 மைல்) தொலைவில் உள்ளன. தாக்குதலை உறுதிப்படுத்தும் வகையில் ஜெட்டா நகரில் உள்ள விமானநிலையத்தில் தரையிறங்க வேண்டிய விமானங்கள் அனைத்தும் நாட்டில் உள்ள மற்ற விமானநிலையங்களுக்குதிசை திருப்பப்பட்டுள்ளதாகதகவல்கள் வெளியாகியுள்ளது. ஆனால், தற்போது வரை சவுதி தரப்பில் இருந்து இந்த தாக்குதல் உறுதிப்படுத்தப்படவில்லை.



## நியூஸிலாந்தில் 8.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை!


நியூஸிலாந்தில் 8.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நியூஸிலாந்தின் கிழக்கு பகுதியில், ஒக்லாந்து நகரில் இருந்து சுமார் 256 மைல்கள் தொலைவில் அன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கடியில் 94 கிலோ மீட்டர் ஆழத்தில் உருவானது.

நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் கடுமையாக குலுங்கின. இதனால் பொதுமக்களிடையே அச்சம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த பகுதியைச் சுற்றி 300 கிலோ மீட்டர் தொலைவுக்கு சுனாமி அலைகள் உருவாக வாய்ப்பு உள்ளதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

மூன்றாவது மற்றும் வலுவான நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர் வடக்கு தீவின் கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிழக்கு கடற்கரையில் சுனாமி அச்சுறுத்தல் இருப்பதாக தேசிய அவசர நிறுவனம் எச்சரித்தது. சில நகரங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் உயர்ந்த நிலத்தை அடைய முயன்றதால் குழப்பம் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



## ஈராக்கில் மீண்டும் ராக்கெட் தாக்குதல்: போப் ஆண்டவர் பிரான்சிஸ் பாதுகாப்பு குறித்து அச்சம்!




ஈராக்கில் மீண்டும் அமெரிக்க படை வீரர்களை குறிவைத்து, ஈரான் ஆதரவு பயங்கரவாதிகள் ரொக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளதால், போப் ஆண்டவர் பிரான்சிஸ் சுற்றுப்பயணத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. போப் ஆண்டவர் பிரான்சிஸ் அன்று (வெள்ளிக்கிழமை) முதல் அடுத்த 3 நாட்களுக்கு ஈராக்கில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்தநிலையில் அன்று (புதன்கிழமை) ஈராக்கின் மேற்குப் பகுதியில் அன்பர் மாகாணத்தில் உள்ள ஐன் அல் ஆசாத் விமானப்படை தளத்தை குறி வைத்து ஈரான் ஆதரவு பயங்கரவாதிகள் ரொக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதன்போது அடுத்தடுத்து 13 ரொக்கெட்டுகள் விமானப்படை தளத்துக்குள் விழுந்து வெடித்துச் சிதறியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் இந்த ரொக்கெட் தாக்குதலில் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதா? அல்லது வீரர்கள் படுகாயம் அடைந்தார்களா? விமானப்படை தளத்துக்கு சேதம் ஏற்பட்டதா? என்பன உள்ளிட்ட தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை. போப்பின் முதல் அமையவுள்ள இந்த பயணம், வத்திக்கான் தனது முன்னோர்களைத் தவிர்த்த ஆபத்தான பயணம் என விபரிக்கப்பட்டுள்ளது.


கொரோனா வைரஸ் தொற்றுநோயால் அவரது வெளிநாட்டு வருகைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்ட ஒரு வருடத்திற்கும் மேலாக அமையும் அவரது முதல் பயணம் இதுவாகும். ஈராக் அரசாங்கம் இதுவொரு வரலாற்று நிகழ்வு என்று விபரித்தது. இது ஈராக் மற்றும் முழு பிராந்தியத்திற்கும் சமாதான செய்தியை குறிக்கிறது என்று வெளியுறவு அமைச்சகம் கூறியது. ஈராக் ஜனாதிபதி பர்ஹாம் சாலிஹ், போப் பிரான்சிஸை ஜூலை 2019இல் ஈராக்கிற்கு வருகை தருமாறு அதிகாரப்பூர்வமாக அழைத்தார். இது பல வருட மோதல்களுக்குப் பிறகு நாடு குணமடைய உதவும் என்று நம்புகிறார்.

2003ஆம் ஆண்டு அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு மற்றும் 2014இல் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை இஸ்லாமிய அரசு கைப்பற்றிய பின்னர் குறுங்குழுவாத போரைத் தொடர்ந்து சில லட்சம் கிறிஸ்தவர்கள் ஈராக்கில் எஞ்சியுள்ளனர். 2000ஆம் ஆண்டில், மறைந்த போப் இரண்டாம் ஜான் பால், பண்டைய ஈராக்கிய நகரமான ஊரைப் பார்வையிட விரும்பினார். பாரம்பரியமாக கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் யூத மதம் ஆகிய மூன்று பெரிய ஏகத்துவ மதங்களின் தந்தை ஆபிரகாமின் பிறப்பிடமாக கருதப்படுகிறது.

ஈராக், எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கான மூன்று படிகளின் யாத்திரையின் முதல் கட்டமாக இது இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்போதைய ஈராக் தலைவரான சதாம் ஹுசைனின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை முறிந்தது. இதனால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை.

## சீனாவில் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் 40 சதவீத மக்களுக்கு கொரோனா தடுப்பூசி!


சீனாவில் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் 40 சதவீத மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



இதுகுறித்து தேசிய சுகாதார ஆணையத்தின் நிபுணர் குழு தலைவர் ஷாங் நன்ஷான் கூறுகையில், 'சீனாவில் கொரோனா பரவல் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் இங்கு கொரோனா தடுப்பூசி திட்டம் மந்தமாகவே செயற்படுத்தப்படுகிறது.

இருந்தாலும், எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் பொதுமக்களில் 40 சதவீதத்தினருக்கு கொரோனா தடுப்பூசியைச் செலுத்த இலக்கு நிர்ணயித்துள்ளோம்' என கூறினார்.

## அசையாமல் மாறும் லென்ஸ்




பொதுவாக, ஒளிப்பதிவு கருவிகளில், ஜூம் லென்ஸ் எனப்படும், வெகு தொலைவு காட்சி ஆடிகள் மிகவும் சிக்கலானவை. இந்த ஆடியை திருகி, முன், பின்னாக நகர்த்தினால்தான் படங்களின் துல்லியத்தை, காட்சியின் விரிவை கூட்டவோ, குறைக்கவோ முடியும். ஆனால், அமெரிக்காவிலுள்ள மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலைய – எம்.ஐ.டி., விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள லென்ஸ் வித்தியாசமானது. பழைய "சிடி" மற்றும் "டிவிடி" தயாரிக்க பயன்படும் ஜெர்மானியம், ஆன்டிமனி, டெலூரியம் ஆகியவற்றுடன், புதிதாக செலினியம் என்ற வேதிப் பொருளையும் கலந்து, புதிய ஆடியை, எம்.ஐ.டி., விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

இந்த ஆடி மீது வெப்பத்தை செலுத்தினால், அதை அசைக்காமலேயே, காட்சியில் மாற்றங்களை கொண்டுவர முடியும். அதே சமயம், ஆடியின் கண்ணாடித் தன்மையில், எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆடியின் குவியப் புள்ளி மட்டும் வெப்பத்திற்கேற்ப மாறுகிறது. இது ஜூம் லென்சின் வேலையை கச்சிதமாக செய்யப் போதுமானது. இந்நுட்பம் ட்ரோன்கள், செல்போன்கள், இரவு பார்வை கருவிகள் போன்றவற்றுக்கான, சிறிய ஜூம் லென்சுகளை தயாரிக்க வருங்காலத்தில் பயன்படும். இக்கண்டுபிடிப்பை பற்றிய ஆய்வுக் கட்டுரை, "நேச்சர் கம்யூனிகேசன்ஸ்" இதழில் வெளிவந்துஉள்ளது.

## இலவச ஹைட்ரஜன் ஆலை!




சூரிய ஒளியிலிருந்து ஹைட்ரஜனை தயாரிக்க, ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். "அகுவா ஏரெம்" என்ற புத்திளம் நிறுவனம், இதற்கென, இரண்டு மாற்று ஆற்றல் நுட்பங்களை பயன்படுத்தும்.

முதலாவது, அகுவா ஏரெம் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தை தயாரிக்கும். தனியாக பிரித்தெடுக்கும்இரண்டாவது, காற்றில் உள்ள ஈரப்பதத்திலிருந்து நீரை உறிஞ்சி சேகரிக்கும் நுட்பத்தை பயன்படுத்துவது. அப்படி சேகரித்த நீரை, சூரிய மின்னாற்றல் மூலம் பகுத்து, ஹைட்ரஜனை தனியாக பிரித்தெடுக்கும்.

மின்சாரம் மற்றும் நீர் ஆகியவற்றை அகுவா ஏரெம், எந்த கட்டணமும் இன்றியே பெறுகிறது. எனவே, இந்த திட்டம் ஏறக்குறைய இலவசமாகவே ஹைட்ரஜனை உற்பத்தி செய்து தரும். "பசுமை" எரிஹைட்ரஜன், தற்போது தொழிற்சாலைகள், வாகனங்கள் போன்றவற்றின், "பசுமை" எரிபொருளாக மாறி வருகிறது.

எனவே, இந்த கூட்டு தொழில்நுட்ப முறை மூலம், ஹைட்ரஜன் தயாரிப்பதை முழு வீச்சில் செயல்படுத்தவிருக்கிறது அகுவா ஏரெம். அப்போது, வெயில் தகிக்கும் வறட்சி பகுதிகளைச் சேர்ந்தோர் கூட, ஹைட்ரஜன் ஆற்றலை ஏற்றுமதி செய்ய முடியும்.

## டென்மார்க்கின் மின் ஆற்றல் தீவு!



உலகின் முதல், "ஆற்றல் தீவு" ஒன்றை டென்மார்க் உருவாக்கி வருகிறது. மனித முயற்சியால் கட்டப்படும் தீவான இதில், பெரிய காற்றாலைகள் அமைக்கப்பட உள்ளன.இந்த காற்றாலைகள் மட்டும், 30 லட்சம் வீடுகளுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாக இருக்கும் என, டென்மார்க் அரசு அறிவித்துள்ளது.

டென்மார்க் அரசு, 51 சதவீதமும், தனியார் நிறுவனங்கள், 49 சதவீதமும் இந்த திட்டத்தில் முதலீடு செய்து வருகின்றன. வரும், 2030ல் நிறைவடையவுள்ள, ஆற்றல் தீவின் பரப்பளவு, 30 ஏக்கராக இருக்கும். டென்மார்க் அரசு, அதன் வரலாற்றிலேயே இத்தனை பெரிய திட்டத்தை மேற்கொண்டதில்லை.கடலுக்கு நடுவே மிதக்கும் காற்றாலைகளை அமைப்பது, ஐரோப்பிய நாடுகளின் பிரியத்திற்குரிய திட்டமாக இருந்து வருகிறது.பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் மிதக்கும் காற்றாலைகளை பெருமளவில் அமைத்து வருகின்றன.

ஆனால், ஒரு பெரிய செயற்கை தீவினை இதற்கென அமைப்பது இதுவே முதல் முறை.ஆற்றல் தீவு முழுமையாக செயல்படும்போது, 12 ஜிகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என, வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். உபரி மின்சாரத்தை, டென்மார்க் தன் அண்டை நாடுகளுக்கு விற்பனை செய்யவிருக்கிறது.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.03.2021 அன்று வெளியிடப்பட்டது.